பக்கங்கள்: 13

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 ஆடி 20 திங்கட்கிழமை 05.08.2024 கதிர் 271

## எம்.பிக்கள் 95 பேரின் சொத்து விவரம் வெளியீடு

இலஞ்சம் மற்றும் ஊழல்குற்றச்சாட்டுகளை விசாரணை செய்யும் ஆணைக்குழு 95 நாடாளுமன்ற உறுப்பினர்களின் சொத்து விவரங்களை பொதுமக்களுக்கு வெளியிட்டுள்ளது.

இந்த நடவடிக்கையானது, பொது அதிகாரிகளிடையே வெளிப்படைத்தன்மை மற்றும்பொறுப்புணர்வை அதிகரிப்பதற்கான ஆணையத்தின்தொடர்ச்சியான முயற்சிகளின் ஒருபகுதியாகும்என்றும் குறிப்பிட்டுள்ளது.

ஏனைய அரசியல் வாதிகள் மற்றும் அரச அதிகாரிகளின் சொத்துப் பிரகடனங்கள் பெறப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதோடு உரிய காலத்தில் பகிரங்கப்படுத்தப்படுவதற்கானசெயற்பாடுகள் முன்னெடுக்கப் படுவதாகவும் ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

வெளியிடப்பட்ட தகவல்கள் ஊழல் தடுப்புச் சட்டத்தில் ☞ 8

## தனி வேட்பாளரை நிறுத்தும் முடிவு ஆத்திரத்தினால் எடுக்கப்பட்டதல்ல

### நாமல் ராஜபக்ச தெரிவிப்பு

ஜனாதிபதி ரணில்லை விட்டு விலகி தனியே வேட்பாளரை நிறுத்துவது என்ற முடிவு ஆத்திரத்தினால் எடுக்கப்பட்டதல்ல் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும், பாராளுமன்றஉறுப்பினருமான நாமல்ராஜபக்ஷதெரிவித்தார்.

ரத்கமவில் நேற்று நடைபெற்ற பொது ஜன பெரமுனவின் மக்கள் சந்திப்பில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

சில தருணங்கள் உயர்மட்டங்களில் எடுக்கப்படும்முடிவினால்எமது ஆதரவாளர்கள் பாதிக்கப்படுகின்றாகள். அவர்கள் யாரை ஆதரிப்பது என்று தெரியாது தடுமாற்றத்துக்கு உள்ளாகின்றார்கள். ஆகவேதான் நாம் ஜனாதிபதி வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதற்கு முயற்சிக்கின்றோம். அவ்வாறு ஜனாதிபதி வேட்பாளர் ஒருவரை நிறுத்துகின்றோம் என்றால் அது ஆத்திரத்தினால் நிறுத்தப்படுவது அல்ல.

வேலைத் திட்டத்தின் அடிப்படையில்தான் வேட்பாளரை நிறுத்துகின்றோம். தற்போது வாய்ப்பேச்சற்ற புத்தியற்ற மேடைகளையே காணமுடிகின்றது. அவ்விதமான அலைகளுக்கு பெரமுன ஒருபோதும் இடமளிப்பதில்லைஎன்றார்.

## இது ரகசியம் அல்ல!

தமிழ் பொதுவேட்பாளர் ஒருவர் கடந்த வாரத்திற்குள் கண்டுபிடிக்கப்பட்டுவிடுவார் என்று விக்னேஸ்வரன் தெரிவித்திருந்தார். ஆனால் அப்படி எந்த வேட்பாளரின் பெயரும் இறுதி செய்யப்பட்டதாகத் தெரியவில்லை. அது தொடர்பாக தமிழ்த் தேசிய பொதுக்கட்டமைப்பு இன்று யாழ்ப்பாணத்தில் கூடிப் பேசவுள்ளது என்று தெரிகின்றது.

இன்றைய கூட்டத்தை வவுனியாவில் நடத்துவது என்று முன்னர் முடிவு செய்யப்பட்டிருந்தது. ஆனால் தமிழ்த் தேசியக் கடசித் தலைவர் சிறீகாந்தாவின் உடல் நிலையைக் கருத்தில்கொண்டு பின்னர் அது யாழ்ப்பாணத்திற்கு மாற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. இருந்தாலும் இன்றைய கூட்டத்தில் ரெலோ மற்றும் புளொட் அமைப்புக்களின் தலைவர்கள் கலந்துகொள்ளமாட்டார்கள் என்றும் ஒரு தகவல் உண்டு.

ஜனாதிபதித் தேர்தலில் பொதுக் கட்டமைப்புச்சார்பில்நிறுத்தப்படவுள்ள வேட்பாளரைக் கண்டுபிடிப்பதற்காக ஒருஉபகுழுநியமிக்கப்பட்டது. அந்த உப குழு 75 பேரின் பெயர்களைப் பரிசீலித்து அவர்களில் 42 ☞ 2

# இலங்கையை நாசமாக்கியோரே ரணிலோடு போய் சேர்கிறார்கள்

### சஜித் பிரேமதாஸ குற்றச்சாட்டு

ராஜபக்ச குலத்தை முத்தமிட்டு இலங்கையைநாசமாக்கிதரப்பினர் ஜனாதிபதியோடு கைகோர்த்து தமக்கு பாதுகாப்பான இடத்தை தேடி வருகின்றனர். ஐக்கிய மக்கள்சக்தியிலும்ஐக்கியமக்கள் கூட்டணியிலும் இந்த திருடர்களுக்கு இடமில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்ட விவசாயிகள்மாநாடு நேற்றுஹங்குராங்கெத்தையில்நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது: ☞ 2

## நாடாளுமன்றம் நாளை கூடுகிறது

நாடாளுமன்றம் நாளை முதல் ஒகஸ்ட் 9 வரை கூடவுள்ளதாக நாடாளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர தெரிவித்தார்.

எதிர்வரும் வாரத்துக்கான நாடாளுமன்ற அலுவல்கள் தொடர்பில் சபாநாயகர்மஹிந்தயாப்பா அபேவர்தன தலைமையில்இடம்பெற்றநாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் இது தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, ஒகஸ்ட் 6 செவ்வாய்க்கிழமை மு.ப. 9.30 மணி முதல்மு.ப. 10.30மணிவரைவாய்மூல விடைக்கான கேள்விகளுக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. அதனையடுத்து மு.ப. 10.30முதல்பி.ப. 5.30மணிவரை எதிர்க்கட்சியினால் கொண்டுவரப்படும் பிரேரணைக்கு அமைய 'மாத்தறை நில்வலா கங்கையை அண்மித்ததாக நிர்மாணிக்கப்பட்டுள்ள உவர்நீர் தடுப்பு காரணமாக ஏற்பட்டுள்ள சிக்கல் நிலைமை'தொடர்பில்சபைஒத்திவைப்பு விவாதத்தை நடத்துவதற்கு ☞ 2

## அறுகம்பே முதல் யாழ்ப்பாணம் வரை பல இடங்களிலும் சுற்றுலா வலயங்கள்

### திருகோணமலையில் ரணில் அறிவிப்பு

அறுகம்பே தொடக்கம் யாழ்ப்பாணம் வரையிலான பல்வேறு இடங்களில் சுற்றுலா வலயங்களைஉருவாக்க எதிர்பார்க்கப்படுகிறது. இந்தபகுதியில்அழகான கடற்கரைஉள்ளது.அதை பயன்படுத்திசுற்றுலாவை மேம்படுத்தவேண்டும் என்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

நடாளுமன்ற உறுப்பினர் கபில அத்துகோரள ☞ 2

### யோசனைகளை ஏற்றால்

## வரும் ஜனாதிபதித் தேர்தலில் சஜித்திற்கே மு.கா. ஆதரவு

### முடிவை அறிவித்தார் ஹக்கீம்

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாசவை ஆதரிக்கும் கட்சியின் உயர்பீடத்தின் முடிவை தலைவர் ரவூப் ஹக்கீம் அறிவித்தார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உச்சபீடக் கூட்டம் கட்சியின் தலைமையகமான தாருஸ்ஸலாமில்நேற்று நடைபெற்றது.கூட்டத்தின் முடிவில் கருத்த வெளியிட்ட ஹக்கீம் மேலும் தெரிவித்ததாவது:

நாங்கள் இந்த உயர்பீடக் கூட்டத்தில் எடுத்த தீர்மானத்தை நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒருவர் வருகை தராத நிலையில், அவரும் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு இணங்குவதாக அவர் அறிவித்திருந்திருந்தார்.

இன்றைய கூட்டத்தில் கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்வும் எங்களுடன் ☞ 2

## பெரமுனவின் களுத்துறை எம்.பி. ரணிலுக்கு ஆதரவாக மாறினார்

ஸ்ரீலங்காபொதுஜன பெரமுனவின் தேசிய அழைப்பாளரும், அக் கட்சியின் களுத்துறை மாவட்டதலைவருமான, நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில்விக்ரமசிங்கவிற்கு ஆதரவளிக்க தீர்மானித்துள்ளார்.

அவரது தேர்தல் தொகுதியான களுத்துறையில் நேற்றையதினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் அபேகுணவர்தன, கட்சி ஆதரவாளர்களின் கோரிக்கைக்கு அமைய இந்தத் ☞ 8

### பொலிஸ் மா அதிபர் விவகாரம்;

## நீதியரசர் – சபாநாயகர் பேச்சு சாத்தியமில்லை

பொலிஸ் மா அதிபர் விவகாரம் தொடர்பில் பிரதம நீதியரசருடன் கலந்துரையாடப் போவதில்லை என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் பிரதம நீதியரசருடன்கலந்துரையாடுவதற்குசட்டரீதியான அடிப்படைகள் இல்லை என்பதை எடுத்துரைத்த சபாநாயகர், அவ்வாறான சூழ்நிலையில்தாம் ☞ 8

## தொழிலதிபர் திலித் ஜயவீரவும் ஜனாதிபதித் தேர்தலில் குதிப்பு

### விமல் வீரவன்ஸ கூட்டணி சார்பில் போட்டி

சர்வசன அதிகார கூட்டணியின்ஜனாதிபதி வேட்பாளராக, பிரபல தொழில் அதிபரும், தாயக மக்கள் கட்சியின் தலைவருமான திலித் ஜயவீர, அறிவிக்கப் பட்டுள்ளார்.

ஒன்றுபட்டு கட்டியெழுப்பப்படும்நாடுமகிழ்ச்சி நிறைந்த தேசம் எனும் தொனிப்பொருளில் கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டு அரங்கில் நேற்று நடைபெற்ற தேசிய மாநாட்டில்விமல்வீரவன்ச உரையாற்றும்போதே அவர் மேற்கண்ட அறிவிப்பை விடுத்தார். அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது:

நாடு அனைத்து வகையிலும் ஏளனம் செய்யப்படுகின்றது. அதற்கான தீர்வு காணப்படுவதே மிகவும் முக்கியமானது. சர்வதேசநாணய நிதியம் நோயாளியை படுக்கையில் வைத்துக் கொண்டுநோய்தீர்க்கப்படுவதற்கு ஒருபோதும் இடமளிப் பதில்லை. ஆனால் மருந்துகளை பரிந்துரைத்தவண்ணமே இருப்பார்கள். ☞ 2

## நாமலின் தவறான செயற்பாடுகளே ஏற்பட்ட இழப்புக்களுக்கு காரணம்

### பெரமுனவின் அனுராதபுரம் எம்.பி. குற்றச்சாட்டு

எனது வீடு எரிக்கப்பட்டமை, அத்துகோரள எம்.பி. தனது உயிரை தியாகம் செய்ய நேர்ந்தமை அனைத்துக்கும் நாமல் ராஜபக்ச உள்ளிட்டோரின் தவறான செயற்பாடுகளே காரணம் என்று பொதுஜன பெரமுனவின் அனுராதபுரம் மாவட்டநாடாளுமன்றஉறுப்பினர் எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்தார்.

கட்சியின் அனுராதபுரம் மாவட்ட அமைப்பாளராக நாமல் ராஜபக்சநியமிக்கப்பட்டமையைத் தொடர்ந்து அவர் இவ்வாறு ☞ 8

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

பேரை வடிகட்டி அவர்களில் சாத்தியமானவர்களுடன் பேசி கடைசியில் இப்போது 5 பேரின் பெயர்களைப் பரிந்துரைத்துள்ளது. இந்த 5 பேரில் யாரை பொது வேட்பாளராக அறிவிப்பது என்பது தொடர்பில் ஆராயவே இன்றைய கூட்டம்.

பொது வேட்பாளராக நிறுத்தப்படுவதற்காக அணுகப்பட்ட பலரும் அதற்கு மறுத்துவிட்டார்கள். இதனால் தமிழ் மக்கள் பொதுச் சபை முன்னர் அறிவித்தது போன்று அரசியல் சாயமற்ற ஒரு சாதாரண நபரை அவர்களால் கண்டுபிடிக்க முடியவில்லை. அதன் விளைவாக இப்போது இறுதி செய்யப்பட்டிருப்பவர்களில் ஒருவரைத் தவிர அனைவருமே அரசியல்வாதிகள்தான். அந்த ஒருவரும் இந்தப் பொது வேட்பாளர் கருத்திட்டத்தின் மூளையாகச் செயற்பட்டவர்களில் ஒருவர். மற்றைய நால்வரும் பொருத்தமான தெரிவு இல்லை என்றால் மட்டுமே ஐந்தாவது நபரின் பெயர் பரிசீலனைக்கு வரும் என்றும் தெரிகிறது.

இதில் வேடிக்கை என்னவென்றால் ஏனைய நால்வரில் மூவர் தமிழ் அரசுக் கட்சியைச் சேர்ந்த அரசியல்வாதிகள். தமிழ் அரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்டக் கிளையைச் சேர்ந்தவரான அரியநேந்திரன், தமிழ் அரசுக் கட்சியின் கொழும்பு மாவட்ட கிளைத் தலைவர் சட்டத்தரணி கே.வி.தவராசா, தமிழ் அரசுக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரநேருவின் மகன் சந்திரகாசன் ஆகியோர்தான் அவர்கள். மற்றைய ஒருவர் தமிழ் மக்கள் கூட்டணி தலைவர் விக்னேஸ்வரன்.

இவர்களில் சந்திரகாசன் பொதுக் கட்டமைப்பின் தேசியம் குறித்த 'பந்தா அரசியலுக்கு' ஏற்ப ஆட்டம் போடுவதற்குத் தயாராக இல்லை. ஜீன்ஸ், ரீ - சேர்ட்ட, கூலிங் கிளாஸ் என்று தனது நடைஉடை பாவனைகளை மாற்றிக்கொண்டு, இவர்கள் கூறும் தமிழ்ப் பாரம்பரிய தேசிய வேடம் போடுவதற்கு அவர் தயாரில்லை. ஆனாலும் விக்னேஸ்வரனின் கடுமையான ஆதரவு அவருக்கு இருக்கின்றது. அரியநேந்திரனைப் பொறுத்தவரையில் பொதுக்கட்டமைப்புக்கு வேறு யாரும் கிடைக்கவில்லை என்றால், போனால் போகிறது என்று பொது வேட்பாளராக நிற்பதற்கு சம்மதித்துள்ளார். இருந்தாலும் பொது வேட்பாளரான பின்னர் அதனை அரசியல் முதலீடாக்கக்கூடாது என்கிற நிபந்தனை மற்றும் பொதுவேட்பாளராகிவிட்டால் தமிழ் அரசுக் கட்சி தன்னை முழுமையாக ஒதுக்கிவிடுமோ என்கிற அச்சம் ஆகியவற்றின் காரணமாக இன்னும் தெளிவான முடிவை எடுக்கவில்லை என்றும் தெரிகிறது.

சட்டத்தரணி தவராசா கட்சிக்குள், தலைமைக்கு எதிரான கிளர்ச்சியாளராக இருந்தாலும் கட்சியின் மத்தியகுழு உறுப்பினர். எதிர்காலத்தில் நாடாளுமன்ற உறுப்பினராகும் நோக்கம் இருப்பதால் பொதுவேட்பாளராவதா இல்லையா என்பதில் அவருக்குமே இரட்டை மனநிலையே இருப்பதாகச் சொல்லப்படுகின்றது. விக்னேஸ்வரனை மற்றைய கட்சிகள் ஏற்றுக்கொள்ள மறுக்கின்றன.

இப்படி இவர்கள் நால்வருமே நிராகரிக்கப்பட்டால் 5ஆவது நபராக இரேனியஸ் செல்வினைக் களமிறக்கும் திட்டமும் இருக்கிறது. ஆனால் அவரும் தாமாகவே முன்வந்து பொதுவேட்பாளராக நிற்பதற்குத் தயங்குகிறார் என்பதே உண்மைநிலை. ஒருவரும் கிடைக்கவில்லை என்றால் தான் நிற்பதற்குச் சம்மதம் என்பதுதான் அவரது நிலைப்பாடு. ஆனால், அவரைத் தெரிவு செய்தால் போட்டியிடுவதில் ஒ-ரு சிக்கல் இருக்கின்றது.

பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சி ஒன்றின் கீழ் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடமுடியும். அல்லது நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவி வகித்தவரே சுயேச்சையாகப் போட்டியிடமுடியும். பொதுக்கட்டமைப்புக்குள் உள்ள கட்சிகள் எவையும் இந்த ஜனாதிபதித் தேர்தலில் தமது கட்சியையும் சின்னத்தையும் பயன்படுத்துவதற்கு இதுவரை இணங்கவில்லை. வெற்றிபெறமுடியாத அல்லது மக்களிடம் பெரும் வரவேற்பைப் பெறமுடியாத இந்தத் திட்டத்திற்காக தமது கட்சியையும் சின்னத்தையும் பலியிட அவை தயாராக இல்லை. ஆக, கட்சிகளில் ஒன்றின் சார்பில் தமிழ் பொது ஜனாதிபதி வேட்பாளர் நிறுத்தப்படவில்லையாயின் செல்வினைப் போட்டியிட வைப்பது சிரமமான காரியமாகிவிடும். சட்டத்தரணி தவராசாவைத் தெரிவு செய்தாலும் இதுவே நிலமை. அதற்காகத்தான் மற்றைய மூவரும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அல்லது முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருக்குமாறு தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்கள்.

ஒருவேளை இன்றைய கூட்டத்திலும் உபகுழுவுன் முன்மொழியைகட்சித்தலைவர்கள் ஏற்கமறுத்தார்கள் என்றால் தாம் தனியாவேனும் ஒரு வேட்பாளரை நிறுத்துவது என்று தமிழ் மக்கள் பொதுச்சபையில் பலரும் தீவிரமாக இருக்கிறார்கள். பார்க்கலாம் கடந்த கால பட்டறிவில் இருந்த உருவாக்கப்பட்டதாகச் சொல்லப்பட்ட பொதுக்கட்டமைப்பு எந்த வகையில் தான் எதிர்பார்க்கும் வகையில் அரசியல் காய் நகர்த்தல்களைச் செய்யப்போகிறது என்பதை.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## இலங்கையை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸ் மா அதிபரை நியமித்த முறையில் காணப்பட்ட குறைபாடுகளைக் கண்டு, உயர் நீதிமன்றம் தடை விதித்தபோது, ஜனாதிபதி, பிரதமர் தலைமையிலான ஆளும்தரப்பு அந்தத் தீர்மானத்தை நாடாளுமன்றத்தில் விமர்சித்தது. இலங்கைக்கான வீஸா வழங்கலை விஎவ்எஸ் (ஙய்றீ) நிறுவனம் மூலம் வழங்கியதால் 1.2 பில்லியன் டொலர் நஷ்டம் ஏற்பட்டுள்ள நிலையில், உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின் மூலம் தடை விதித்துள்ளமை தொடர்பில் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் ஆளும்தரப்பினர் என்ன கூறப்போகின்றனர்?

திருடர்களைப் பிடிப்போம் எனப் பெரிதாகக் கூறிக்கொள்ளும் சிவப்பு சகோதரர்கள் வி.எப்.எஸ். கொடுக்கல் வாங்கல் தொடர்பில் எந்தப் பேச்சும் இல்லை. வி.எப்.எஸ். கொடுக்கல் வாங்கள் ஒப்பந்தம் தொடர்பில் நாடாளுமன்றத்தில் நானே முதலில் வெளிக்கொணர்ந்தேன். பல்வேறு தரப்பினரும் நாடு முழுவதும் பொய் பரப்புரை மேற்கொண்டு வருகின்றனர். சகோதரர்கள் திருடர்களைப் பிடிப்பதாகச் சொன்னாலும் திருடர்களுடன் 'டீல்' போட்டுள்ளனர்.

ராஜபக்சக்களுடன் கைகோர்த்து அரசியல் செய்தவர்கள் தற்போது ஒருவர் பின் ஒருவராக ஜனாதிபதியுடன் கைகோர்த்து வருகின்றனர். மக்களே இவர்களின் முகங்களை நன்றாக ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள். அடைக்கலம் தேடியே ரணிலோடு இணைகின்றனர்.

ராஜபக்ச குலத்தை முத்தமிட்டு நாட்டையே நாசமாக்கி தரப்பினர் ஜனாதிபதியோடு கைகோர்த்து தமக்கு பாதுகாப்பான இடத்தை தேடி வருகின்றனர். ஐக்கிய மக்கள் சக்தியிலும் ஐக்கிய மக்கள் கூட்டணியிலும் இந்த திருடர்களுக்கு இடமில்லை.

தனிப்பட்ட நன்கொடையாளர்களின் நிதிப் பங்களிப்பில் எதிர்க்கட்சியால் முன்னெடுக்கப்பட்டு வந்த 'பிரபஞ்சம்' மற்றும் 'மூச்சு' திட்டங்களை இடைநிறுத்தியுள்ளனர். ஆனால், மக்கள் வரிப்பணத்தால் அரச நிதியில் ஆரம்பிக்கப்பட்ட திட்டங்களை ஜனாதிபதி திறந்து வைக்கும் வைபவங்களை நடத்துகிறார்.

சட்டம் யாவருக்கும் ஒன்றுபோல் இருக்கவேண்டும். ஜனாதிபதியின் நிகழ்ச்சிகளுக்கு அனுமதி வழங்குவது போன்று பிரபஞ்சம், மூச்சுத் திட்டங்களுக்கும் அனுமதி வழங்கப்பட வேண்டும்.

நாட்டில் ஊட்டச்சத்து குறைபாடு காணப்பட்டு வருகிறது. 23 இலட்சம் பிள்ளைகள் ஊட்டச்சத்து குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளனர் என யுனிசெப் நிறுவனமே தெரிவித்துள்ளது. இது பாரதூரமான பிரச்சினையாகும். பாடசாலை மாணவர்களின் போசாக்கு வீழ்ச்சியடைந்துள்ளது. ஆனால் ஆட்சியாளர்களிடம் இதற்கு தீர்வுகள் இல்லை.

விவசாயிக்கு உரத்தைப் பெற்றுக்கொடுக்க அரசிடம் பணம் இல்லாவிட்டாலும், ஜனாதிபதியின் பொழுதுபோக்கிற்காக கோடிக்கணக்கில் பணத்தை ஒதுக்கியுள்ளனர். நாட்டின் ஜனாதிபதியே நாட்டுக்காக அதிக தியாகம் செய்து, ஆதர்சமான நபராகத் திகழ வேண்டும். ஆனால் இங்கு எல்லாம் தலைகீழாக மாறியுள்ளது. இந்த கலாச்சாரத்தை மாற்றவேண்டும்.

நாட்டை ஆள்பவர்கள் 7 நட்சத்திர ஹோட்டல்களிலும், மாளிகைகளிலும் சொகுசான வாழ்க்கை வாழ்ந்து வருவதனால், சாதாரண மனிதன் படும் துக்கங்களும் வலிகளும் அவர்களுக்குப் புரிவதில்லை. சாதாரணமக்கள் படும் துன்பங்களை தற்போதைய ஆட்சியாளர்கள் கண்டுகொள்ளாது இருந்து வருகின்றனர். எனவே, இந்த மாளிகை கலாச்சாரத்தை முடிவுக்குக் கொண்டு வந்து, இந்த நாட்டின் விவசாயிகள், மீனவர்கள், தோட்டத் தொழிலாளிகள், அரசு ஊழியர், நடுத்தரக்குடும்பங்களின் பிள்ளைகள் சர்வதேச தரத்திலான தகவல் தொழில்நுட்பப் பல்கலைக்கழகப் பட்டங்களைப் பெறும் நிறுவனங்களாக மாற்றுவோம். ஐக்கிய மக்கள் சக்தி இதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படும் - என்றார்.

## அறுகம்பே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வினால் ஏற்பாட்டில் திருகோணமலை மாவட்ட அரசியல் செயற்பாட்டாளர்களுடன் திருகோணமலை இந்து கலாசார நிலையத்தில் நேற்று நடைபெற்ற சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த நாட்டை இளைஞர்களுக்காக கட்டியெழுப்பவேண்டும். இறக்குமதிக்கு செலுத்துவதற்கு அந்நிய செலாவணி போதுமானதாக இல்லாதிருப்பதுதான் எமக்குள்ள பிரதான பிரச்சினையாகும். அதனால் கடன் வாங்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 10 ஆண்டுகளுக்கு இந்த நிலைதொடர்ந்தால், 15 ஆண்டுகளில் நாட்டின் பொருளாதாரம் மீண்டும் வீழ்ச்சியடையும். எனவே, பொருளாதார மாற்றத்தை ஏற்படுத்தவேண்டும். ஏற்றுமதி பொருளாதாரத்தின் மூலமே நாட்டை முன்னேற்ற முடியும். அடுத்த ஐந்தாண்டுகளில் புதிய திட்டங்களைத் தொடங்கி இந்தப் பணியைச் செய்யவேண்டும்.

இலவச சப்பாத்துகள் வழங்கினால்தான் இந்நாட்டின் பிரச்சினைகள் தீரும் என்றாலும், சப்பாத்துகளை வழங்குவதற்கும் பணம் தேவைப்படுகிறது. எனவே நாம் அனைவரும் ஒன்றுபட வேண்டும். அரசியல் செய்வதற்கும் நாட்டில் பொருளாதாரம் இருக்க வேண்டும்.

பக்கத்து வீட்டுக்காரர் பொதுஜன பெரமுனையிலும் அடுத்த வீட்டில் இருப்பவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியிலும் மற்ற வீட்டில் இருப்பவர் ஐக்கிய மக்கள் சக்தியிலும் இருந்தாலும் மூன்று வேளையும் சாப்பாடு கிடைக்காவிட்டால் என்ன பயன்? அதனால் நாம் அனைவரும் ஒன்றுபட வேண்டும்.

பிரதமர் பதவியை ஏற்குமாறு அறிவித்த போது தப்பியோடியது யார்? பிரதமர் பதவிக்கு கையேந்திய வேறு நாடு உலகில் இருக்கமுடியுமா? எனது நண்பர் அனுரகுமார திசாநாயக்கவை கண்டுபிடிக்க முடியவில்லை. ஆனால் இந்த சவாலை ஏற்று நாட்டை அபிவிருத்தி செய்தோம். மேற்படி அபிவிருத்தி வேலைத்திட்டத்தில் திருகோணமலை மாவட்டம் குறித்து விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

4 வருடங்களாக இந்த நாட்டின் இளைஞர்களுக்கு தொழில் கிடைக்கவில்லை. எனவே, இந்த மாகாணங்கள் ஒவ்வொன்றுக்கும் புதிய திட்டங்களை இப்போது ஆரம்பிக்கிறோம். திருகோணமலை துறைமுக அபிவிருத்தி தொடர்பில் இந்திய அரசுடன் கலந்துரையாடப்பட்டுள்ளது. மேலும், எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை திருகோணமலைக்கு கொண்டுவர திட்டமிடப்பட்டுள்ளது.

இப்பகுதியை வலுசக்தி மையமாக மேம்படுத்தவும் எதிர்பார்க்கப்படுகிறது. கைத்தொழில் பேட்டையொன்றை உருவாக்க சுமார் ஆயிரம் ஏக்கர் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கந்தளாய் பிரதேசத்தில் புதிய பயிற்செய்கைகளை ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த கிழக்கு மாகாணத்தில் விவசாய நவீனமயமாக்கல் வேலைத்திட்டத்தை மிகவும் வெற்றிகரமாக முன்னெடுக்க முடியும். தற்போது பசு வளர்ப்பு , மீன்பிடித் தொழில் நவீனமயமாக்குதல் போன்ற திட்டங்களை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளோம். மேலும், இந்த நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்துவற்கு சுற்றுலாத்துறையை மேம்படுத்த முடிவு செய்துள்ளோம்.

இந்த நாட்டிற்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை 25 இலட்சத்தில் இருந்து 50 இலட்சமாக அதிகரிக்க திட்டமிட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகின்றது. அறுகம்பே தொடக்கம் யாழ்ப்பாணம் வரையிலான பல்வேறு இடங்களில் சுற்றுலா வலயங்களை உருவாக்க எதிர்பார்க்கப்படுகிறது. இந்தபகுதியில் அழகான கடற்கரைகள் உள்ளன. அதை பயன்படுத்தி சுற்றுலாவை மேம்படுத்த வேண்டும்.

ஹிங்குரக்கொட விமான நிலையத்தின் அபிவிருத்திக்கு தற்போது நிதி வழங்கப்பட்டுள்ளது. இந்தப் பகுதிகளுக்கு வந்து கூச்சல் போடுவதால் எந்தப் பயனும் இல்லை. நாட்டை அபிவிருத்தி செய்ய வேண்டுமானால் பாடுபட வேண்டும். அதை நாம் ஜே.ஆர்.ஜெயவர்தனவின் அரசியலில் இருந்து கற்றுக்கொண்டோம். 30 வருடங்கள் செல்லும் என்று கூறப்பட்ட மகாவலித் திட்டம் 10 வருடங்களில் நிறைவு செய்யப்பட்டது.

பின்னர் இரண்டு வர்த்தக வலயங்கள் உருவாக்கப்பட்டன. நாம் அனைவரும் ஒன்று சேர்ந்தால் முன்பைவிடப் பலபணிகளைசெய்ய முடியும். நாம் புதிய முறையில் முன்னேற வேண்டும். நாம் அனைவரும் ஒன்றிணைந்ததும் சுயாதீனமானதும் புதியவிடயமாகும்' என்றார்.

## நாடாளுமன்றம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்போது தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஓகஸ்ட் 7, புதன்கிழமை மு.ப. 9.30 மணி முதல் மு.ப. 10.00 மணி வரை வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. அதனையடுத்து மு.ப. 10.00 மணி முதல் பி.ப. 5.30 மணி வரை ஆளும் தரப்பினால் கொண்டுவரப்படும் பிரேரணைக்கு அமைய 'அரையாண்டின் அரசிறை நிலைப்பாட்டு அறிக்கை' தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதம் இடம்பெறவுள்ளது.

ஓகஸ்ட் 8, வியாழக்கிழமை மு.ப. 9.30 மணி முதல் மு.ப. 10.30 மணி வரை வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. அதனையடுத்து மு.ப. 10.30 முதல் பி.ப. 5.00 மணி வரை இரண்டு மருத்துவ (திருத்தச்) சட்ட மூலங்களின் இரண்டாம் மதிப்பீடு மீதான விவாதம் இடம்பெறவுள்ளது. அதன்பின்னர் பி.ப. 5.00 மணி முதல் பி.ப. 5.30 மணி வரை சபை ஒத்திவைப்பு நேரத்தின் போதான கேள்விகளுக்காகவும் நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஓகஸ்ட் 9 வெள்ளிக்கிழமை மறைந்த முன்னாள் அமைச்சர் ரொனி டி மெல் தொடர்பான அனுபதாபப் பிரேரணைக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. அதற்கமைய முன்னாள் அமைச்சர் தொடர்பான அனுதாபப் பிரேரணைக்காக மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 5.30 மணி வரையான நேரத்தை ஒதுக்குவதற்கு நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது

## வரும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உடனிருந்தார். ஏனைய அனைவரும் ஏகமானதாக ஏற்றுக் கொள்வதாக உத்தரவாதம் அளித்திருந்தனர்.

அதேவேளை இந்தக் கட்சியினுடைய உயர்பீடம் நீண்ட நேரம் பலவிடயங்களைக் கலந்துரையாடி, மக்கள் எதிர்பார்க்கின்ற சகல விடஙங்களுக்கும் சரியான தீர்வு எட்டப்படவேண்டும் என்பதோடு எமது சமூகம் சார்ந்த மற்றும் நாட்டின் நலன் சார்ந்த பல விடயங்களை நாங்கள் கலந்தாலோசித்தோம்.

அதனடிப்படையில் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் நாங்கள் ஆதரவளிப்பதற்கு மிகப் பொருத்தமானவர் என்ற அடிப்படையில் சஜித் பிரேமதாசவை நாங்கள் ஆதரிப்பது என்றாலும் அவர் நாம் முக்கியமாக முன்வைக்கும் கோரிக்கைகளுக்கு சம்மதத்தை தெரிவிக்கும் பட்சத்தில் அந்த ஆதரவை நாங்கள் ஊர்ஜிதப்படுத்துவதாகத் தீர்மானித்திருக்கிறோம்.

அதற்கமைவாக அடுத்துவரும் 72 மணித்தியாலயங்களுக்குள் இது தொடர்பான பேச்சு அவருடன் மேற்கொள்ளவுள்ளேன். அவற்றுக்கு அவர் இணங்கும் பட்சத்தில் எமது உறுப்பினர்கள் அனைவருக்கும் அறிவித்து சஜித் பிரேமதாசாவின் வெற்றிக்காக நாங்கள் மும்முரமாக ஈடுபடவுள்ளோம்.

அடிப்படை விடங்களில் உடன்படிக்கை காணப்படாவிட்டால் மட்டும். அவர் அவ்வாறான விடயங்களில் தலைவரோடு உடன்படவில்லை என்பதை தலைவர் உணர்ந்து கொள்ளக் கூடியதாக இருந்தால் மீண்டும் எங்களுடைய உயர்பீடத்தைக் கூட்டி இந்த முடிவை மீளாய்வு செய்ய நேரிடலாம்.

அதை மீளாய்வு செய்வதனால் மீண்டும் உயர்பீடத்தினாலேயே அதனைச் செய்யலாம். அதனை நான் தனித்து மேற்கொள்ள முடியாது. முக்கியமான விடயங்களை எழுத்து மூலம் பெறுவோம். அவரது தேர்தல் முன்னெடுப்பை பாதிக்கும் விதத்தில் எங்கள் கோரிக்கை அமைந்திருக்கப் போவதில்லை.

விசேடமாக முஸ்லிம் காங்கிரஸின் ஒத்துழைப்பு அவருக்கு அவசியம் என்பதால் எங்களுடன் உடன்படுவாரென நம்புகிறோம். ஒவ்வொரு பிரதேசத்திலும் காணப்படும் தேவைகளை எங்களது கட்சியின் எமது அமைப்பாளர்கள் எனது கவனத்துக்குக் கொண்டு வந்திருக்கின்றார்கள். அவற்றை அவரிடம் கூறுவேன். அவர் அவற்றைத் தெரிந்து வைத்திருக்க வேண்டும். முன்னரும் அவரிடம் கதைத்த விடயங்களை பெரும்பாலும் மீண்டும் அவருக்கு நினைவூட்டவுள்ளேன்.

இதேவேளை, சஜித் பிரேமதாச இணங்காத பட்சத்தில் ரணில் விக்கிரமசிங்கவுடன் கதைப்பீர்களா என்று ஊடகவியளாலர் ஒருவர் கேட்டபோது, அப்படியல்ல அவ்வாறானால் அநுரகுமார திசாநாயக்கவுடனும் நாங்கள் பேசலாம்தானே.

அமைச்சர் பதவிகளைப் கோருகிறீர்காளா என்று ஊடகவியலாளர் ஒருவர் கேட்டபோது, அது பற்றிப் பேசமாட்டோம். பதவிகள் அல்ல எங்களுக்கு முக்கியம்.

தொடர்ச்சி 8ம் பக்கம்....

காலைக்கதிர் Kalaikkathir

# இரா.சாணக்கியன் எம்.பி. என் மீது பழிசுமத்துவது கோழைத்தனமானது

## வியாழேந்திரன் பகிரங்க விளக்கம்

சாணக்கியன் கடந்த சில நாள்களுக்கு முன்னர் தன் மீது அபாண்டமாக குற்றம் சுமத்தி அதனூடாக அரசியல் செய்து தன்மீது கரை பூச துடிப்பதாக இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் குற்றம் சுமத்தியுள்ளார்.

தமது பிரத்தியேக செயலாளர் மற்றும் உதவியாளர் இலஞ்ச ஊழல் அதிகாரிகளால் கடந்த சில நாள்களுக்கு முன்னர் மட்டக்களப்பில் வைத்து கைது செய்யப்பட்டமை தொடர்பில் தனியார் ஊடகங்களுக்கு தமது நற்பெயருக்கு களங்கம் விளைவிக்கும் வகையில் இராசமாணிக்கம் சாணக்கியன் சம்பவ தினமான அன்று நானும் அங்கு இருந்ததாகவும் இலஞ்ச ஊழல் அதிகாரிகள் வருகை தந்திருந்த வேலை அங்கிருந்து நான் ஓட்டோ ஒன்றில் தப்பி சென்றேன் என பகிரங்கமாக பொய் குற்றச்சாட்டினை சுமத்தி வதந்திகளை பரப்பி இதனை வைத்து அரசியல் இலாபம் கான துடித்து வருகின்றார் என இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் குற்றம் சுமத்தியுள்ளார்.

அவ்வாறு தாம் எவரிடமும் இலஞ்சம் வாங்கவில்லை எனவும் இலஞ்ச ஊழல் ஆணைக் குழு அதிகாரிகள் ஆதரவாளரை கைது செய்த இடத்தில் தான் அவ்விடத்தில் இருக்கவில்லை எனவும் தனது மெய்ப்பாதுகாவலர் மூலம் அதனை தன்னால் நிரூபிக்க முடியும் எனவும் தெரிவித்தார் வியாழேந்திரன்.

குறித்த சம்பவத்துடன் தொடர்பு படுத்தி திரிபு படுத்திய கருத்துக்களை வெளியிட்ட சாணக்கியன் மேற்படி சம்பவத்தின் போது, தான் இருந்ததை நிரூபித்து காட்டினால் தான் அரசியலில் இருந்து முற்றாக விடை பெறுவதாகவும் அவ்வாறு நிரூபிக்காவிட்டால் நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் அரசியலில் இருந்து விடை பெறுவாரா? என பகிரங்க சவால் விடுவதாக இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் தெரிவித்தார்.

தாம் மட்டக்களப்பு மாவட்டத்தில் பல அபிவிருத்தி திட்டங்களை செய்து வருவதை பொறுக்க முடியாத சாணக்கியன், பொய்களை மாத்திரம் கூறி அரசியல் செய்துவரும் இராசமாணிக்கம் சாணக்கியனுக்கு தன்னை பற்றி அவதூறு கூறுவதற்கு எந்த வகையிலும் தகுதி இல்லை எனவும் அவர் மூளை இல்லாத அரசியல்வாதி எனவும் குற்றம் சுமத்தியுள்ளார்.

பல தடவைகள் சாணக்கியன் அவர்கள் நேரடியாகவும் சரி மறைமுகமாகவும் சரி பல சவால்களை விட்டு இருக்கின்றார் இருப்பினும் இவ்வாறு தான் செய்யாத ஒன்றை செய்ததாகவும்



குறித்த சம்பவத்தின் போது உரிய இடத்தில் இல்லாத என்னை அங்கிருந்து தப்பி சென்றதாகவும் பொய்யாக வதந்திகளை பரப்பி அதில் அரசியல் இலாபம் காண துடிக்கும் சாணக்கியனுக்கு எதிராக தான் மான நஷ்ட ஈடு வழக்கு ஒன்றை பதிவு செய்து சட்ட நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளதாகவும் இதன் போது சுட்டிக்காட்டினார். (05)

# வவுனியா இளைஞனின் உயிரிழப்பு சந்தேகம்

## உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உத்தரவு

வவுனியாமகாறம்பைக்குளம் தாஸ்நகர் பகுதியில் சடலமாக கண்டுபிடிக்கப்பட்ட 26 வயதுடைய இளைஞனின் மரணத்தில் சந்தேகம் இருப்பதால் அவரது சடலத்தை உடற்கூற்றாய்வுபரிசோதனைக்கு உட்படுத்துமாறு வவுனியா நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை மாலைதாஸ்நகர் பகுதியில் உள்ள வீடொன்றில் இளம் குடும்பஸ்தர் தவறான முடிவெடுத்து உயிர்மாய்த்துக்கொண்ட நிலையில் அயலவர்களால் மீட்கப்பட்டிருந்தார்.

உடனடியாக வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்ட அவர், ஏற்கெனவே உயிரிழந்துள்ளார் எனவைத்தியசாலையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக பொலிஸாருக்கு தெரிவிக்கப்பட்ட நிலையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர்.

இந்தஇளைஞனின்மரணத்தில் சந்தேகம்இருப்பதாகபொலிஸார் சந்தேகம் தெரிவித்ததையடுத்து, சடலத்தை பார்வையிட்ட நீதிவான், சடலத்தை உடற்கூற்று பரிசோதனைக்குஉட்படுத்துமாறு உத்தரவிட்டுள்ளார்.

இளைஞனின் சடலம் வவுனியா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன் இன்று உடற்கூற்று பரிசோதனை செய்யப்படவுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக வவுனியா பொலிஸார் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.(05)

# மருத்துவரின் அலட்சியமே பெண் சாவுக்குக் காரணம்

## பொது அமைப்புகளின் ஒன்றியம் சுகாதார அமைச்சுக்கு கடிதம்

மன்னார் மாவட்ட வைத்திய சாலையில் மரியராஜ் சிந்துஜா என்ற பெண் மரணமடைந்தமை தொடர்பில் மன்னார் மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியம் சுகாதார அமைச்சின் செயலாளருக்கு கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளது.

மரியராஜ் சிந்துஜாவிற்கு நீதி கிடைக்கவேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ள மன்னார் மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியம், இந்த மரணம் குறித்த விசாரணைகள் மூடி மறைக்கப்படாமலிருப்பதை உறுதி செய்யவேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

அந்த கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவைவருமாறு -

திருமதி மரியராஜ் சிந்துஜா என்பவர் கடந்த மாதம் 9 ஆம் திகதி மன்னார் வைத்தியசாலையில் சத்திர சிகிச்சை மூலம் குழந்தை பெற்றுள்ளார்.

11 ஆம் திகதி தாயும் சேயும் நலமாக வீடு சென்றுள்ளனர்.

16 ஆம் திகதி தையல் வெட்டுவதற்காக முருங்கன் வைத்தியசாலைக்கு சென்றுள்ளனர்.

பின்னர் 27 ஆம் திகதி குருதிபெருக்கு காரணமாக இரவு மன்னார் மாவட்ட வைத்தியசாலையில் சேர்ந்துள்ளனர்.

மறுநாள் காலை வரை எந்த வைத்தியரும் அவர்களை பார்வையிடவில்லை. விடுதிக்கு பொறுப்பான வைத்தியர்கள் விடுதியில் இருந்துள்ளனர்.

தாதிய உத்தியோகத்தர், வைத்தியர்களிற்கு அறிவித்தும் அவர்கள் வரவில்லை.

ஆகவே, வைத்தியர்களின் பொறுப்பற்ற செயலால் அந்த பெண் மரணமடைந்துள்ளார். வைத்தியசாலைகளில் இவ்வாறான பொறுப்பற்ற செயல்கள் தொடர்வது வாடிக்கையாகிவிட்டது. அதுவும் இரவு நேரங்களில் இந்த நிலை தொடர்கின்றது. உயிருடன் விளையாடும் அசட்டையீனங்கள் தொடர்கின்றன.

மருத்துவ தவறு எனும் சட்டபாதுகாப்பு கவசத்தால் தினந்தோறும் நாடு தோறும் பலர் பலியாகின்றனர்.

இந்த விடுதிக்கு பொறுப்பாகயிருந்த ஒரு வைத்தியரின் பொறுப்பற்ற செயற்பாட்டால் ஓர் இளம் பட்டதாரி பெண்ணை கொலை செய்துவிட்டனர்.

இவர்கள் இந்த பெண்ணின் மரணத்திற்கு பொறுப்புகூற வேண்டும்.

உயிரோடுஉறவாடும்உன்னத பணியை செய்தவர்கள் இப்படி பொறுப்பற்றுநடந்துகொள்ளலாமா?

ஏற்கனவே இந்த வைத்திய சாலையில் இரண்டு மரணங்கள் நிகழ்ந்துள்ளன.

இந்தபெண்ணின்உடற்கூற்று அறிக்கை நீதியாக வெளிவருமா என்ற சந்தேகம் எழுகின்றது.

எனவே இந்த சம்பவத்தை திட்டமிட்ட கொலையாகவே கருதுகின்றோம்.

பொறுப்பற்ற உத்தியோகத்தர்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும். - என்றுள்ளது. (05)

# மு.கா. உயர்பீட கூட்டத்திலிருந்து யஹியாகான் வெளியேற்றம்

(கே எ ஹமீட்)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உயர்பீட கூட்டம் ஞாயிற்றுக்கிழமை கட்சியின் தலைமையமான தாருஸ்ஸலாத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது , லுஹர் தொழுகைக்கான அதான் ஒலித்த வேளையில், கூட்டம் தற்காலிகமாகநிறுத்தப்பட்டிருந்த சந்தர்ப்பத்தில், பிரதிப் பொருளாளர் ஏ.சி.யஹியாகான் எடுத்திருந்தபடங்களைமுகநூலில் பதிவேற்றம் செய்ததமை , விஷமிகளுக்கு கட்சியை அநாகரிகமாக முகநூலில் விமர்சிக்க இடமளித்தமை ஆகிய குற்றச்சாட்டுகளால் கட்சியின்தலைவர்ரவூப்ஹக்கீம் ,அவரை கூட்டத்திலிருந்து வெளியேற்றுவதாக அறிவித்தார்.

கட்சியின் தலைவர் ஹக்கீம் உடனடி நடவடிக்கையாக யஹியாகானை நடைபெற்று கொண்டிருந்தஉயர்பீடக்கூட்டம் மற்றும்அடுத்தஉயர்பீடக்கூட்டம் ஆகிய இரு அமர்வுகளிலும் பங்குபற்றக்கூடாது என இடைநிறுத்துவதாகக் குறிப்பிட்டார்.

கட்சியில்யஹியாகானுடைய வகிபாகம் பற்றி பாராட்டியதோடு , இந்த முடிவை மனவருத்தத்தோடு எடுக்கவேண்டிய நேர்ந்தது பற்றியும்தலைவர் தெரிவித்தார்.

தலைவரின் முடிவுக்குக் கட்டுப்பட்டு, அவருடன் கைலாகு கொடுத்து, முன்மாதிரியான முறையில் யஹியாகான் அங்கிருந்து வெளியேறிச் சென்றார். (05)

# காணாமல்போன நான்கு சிறுவர்களும் தலவாக்கலை பொலிஸிடம் ஒப்படைப்பு

கடந்த மாதம் காணாமல் போன 3 சிறுவர்கள் மற்றும் ஒரு சிறுமி ஆகிய நால்வரும் கண்டுபிடிக்கப்பட்டு நேற்று (ஞாயிற்றுக்கிழமை) தலவாக்கலைபொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

கிரேட் வெஸ்டர்ன் தோட்டத்தைச் சேர்ந்த இந்த 4 பேரும் எவ்வாறு காணாமல் போனார்கள்? எங்கிருந்தார்கள்? என்பது தொடர்பான விசாரணைகளை தலவாக்கலை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

இந்த 4 பேரும் காணாமல்போய் தேடப்பட்டு வந்த நாட்களில்காலிமாவட்டத்தின் மீட்டியாகொட பிரதேசத்திலுள்ள உறவினர் ஒருவரின் வீட்டில் மறைந்து வாழ்ந்துள்ளனர்.

அத்தோடு வேலை தேடிச் சென்ற இவர்கள் தொழிற்பயிற்சியிலும் ஈடுபட்டு வந்துள்ளதாக விசாரணைகளிலிருந்துதெரிய வந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும், இச்சிறுவர்களின் தொலைபேசி மூலமான தொடர்புகளின் அடிப்படையிலேயே சிறுவர் கள் இருக்குமிடம் கண்டுபிடிக்கப்பட்டதாகபொலிஸார் தெரிவித்தனர்.

காணாமல்போன நான்கு பிள்ளைகளும் கிடைத்தமை தொடர்பில் அவர்களின் பெற்றோர்களுக்கு அறிவித்துள்ள நிலையில், பெற்றோர்களையும் பொலிஸ் நிலையத்துக்கு வரவழைத்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்த நான்கு சிறுவர்களிடமும் பொலிஸார் தொடர்ந்து விசாரணை முன்னெடுத்து வருகின்றனர்.

அத்தோடு இந்த நான்கு சிறுவர்களையும் இன்று (திங்கட்கிழமை) நுவரெலியா மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்து வருவதாக பொலிஸ் நிலைய அதிகாரியொருவர் தெரிவித்தார். (05)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com


## நீதியான சுயாதீனமான விசாரணை அவசியம்

மன்னார் மாவட்ட வைத்தியசாலையில் மரியராஜ் சிந்துஜா என்ற பெணின் உயிரிழப்புத் தொடர்பில் நீதியான விசாரணைகள் வேண்டும் என்ற குரல் ஓங்கி ஒலிக்கத் தொடங்கியுள்ளது. மன்னார் மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியம் சுகாதார அமைச்சின் செயலாளருக்கு கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளது.

மரியராஜ் சிந்துஜாவிற்கு நீதி கிடைக்கவேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ள மன்னார் மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியம் இந்த இறப்புக் குறித்த விசாரணைகள் மூடி மறைக்கப்படாமலிருப்பதை உறுதி செய்யவேண்டும் என அந்தக் கடிதத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

மருத்துவத் தவறு அல்லது புறக்கணிப்பு காரணமாக இந்த இறப்பு நிகழ்ந்திருக்கலாம் என்கிற சந்தேம் வலுப்பதே இத்தகைய நீதி விசாரணைக் கோரிக்கைக்கான காரணம். இந்த விடயத்தில் மருத்துவத் துறையைச் சேர்ந்தவர்களில் சிலரேகூட நீதியான விசாரணை நடத்தப்படவேண்டும் என்று குரல் எழுப்புகின்றனர். அவர்களில் முக்கியமானவராக சமுதாய மருத்துவர் மரளி வல்லிபுரநாதனைக் குறிப்பிடலாம். மருத்துவப் புறக்கணிப்புக்கள் காரணமாக ஏற்படும் இறப்பு மற்றும் உடல் உறுப்பு இழப்புக் குறித்து தீவிரமான நடவடிக்கைகள் எடுக்கப்படுவது இலங்கையில் மிக மிகக் குறைவு என்கிற குற்றச்சாட்டு நீண்ட காலமாகவே இருந்து வருகின்றது.

இதற்கான போதிய சட்ட ஏற்பாடுகள் இல்லாததும் இதற்கொரு காரணம் என்று சொல்லப்படுகின்றது. இதனால் பல இறப்புக்கள் கண்டும் காணாமலும் விட்டப்பட்டுள்ளன. அல்லது பேருக்கு நடத்தப்படும் போலியான விசாரணைகள் மூலம் மூடிமறைக்கப்படுகின்றன என்பதும் நீண்ட காலக் குற்றச்சாட்டாகவே இருக்கின்றது. இதற்குக் காரணம் மருத்துவத் துறை சார்ந்தவர்களே இது தொடர்பிலான விசாரணைகளை நடத்தும் பொறிமுறையக் கொண்டிருக்கின்றார்கள் என்பதுதான். அவர்கள் ஒருவரில் ஒருவர் தங்கியிருக்கும் நிலையில், அல்லது நெருக்கமான ஆசிரிய மாணவர் உறவைக் கொண்டிருக்கும் நிலையில் இத்தகைய மருத்துவப் புறக்கணிப்புச் சாவுகள் தொடர்பில் நேர்மையான விசாரணைகள் நடப்பது அரிதாகவே நிகழ்கின்றது.

மன்னாரில் உயிரிழந்த திருமதி மரியராஜ் சிந்துஜா ஆடி 9 மன்னார் வைத்தியசாலையில் சத்திர சிகிச்சை மூலம் குழந்தை பெற்றுள்ளார். இரு நாள்கள் கழித்து தாயும் சேயும் நலமாக வீடு திரும்பியுள்ளனர். ஆடி 16 தையல் வெட்டுவதற்காக முருங்கன் வைத்தியசாலைக்கு சென்றுள்ளனர். பின்னர் ஆடி 27 குருதிபெருக்கு காரணமாக இரவு மன்னார் மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மறுநாள் காலைவரை எந்த வைத்தியரும் அவர்களை பார்வையிடவில்லை. மருத்துவ விடுதிக்கு பொறுப்பான வைத்தியர்கள் ஓய்வு விடுதியில் இருந்தனர் என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது. தாதிய உத்தியோகத்தர் வைத்தியர்களிற்கு அறிவித்தும் அவர்கள் வரவில்லை. ஆகவே வைத்தியர்களின் பொறுப்பற்ற செயலால் அந்த பெணின் இறப்பு நிகழ்ந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. அவரது இறப்புத் தொடர்பில் விசாரணை நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டி–ருந்தாலும் அது நீதியானதாகவும் நேர்மையானதாகவும் இருக்காது என்கிற சந்தேகம் வலுத்து வருகின்றது. மருத்துவத்துறை சார்ந்தவர்களால் இதுவும் மூடிமறைக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. எனவே இது தொடர்பில் சுயாதீனமான முன்னாள் நீதிபதி ஒருவர் தலைமையிலான விசாரணைக் குழுவை நியமித்து விசாரிக்கவும் குற்றவாளிகள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கவும் சுகாதாரத்துறை அமைச்சர் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

# ஊடுருவி பழிதீர்க்கும் இஸ்ரேலின் மொசாட்



ஐங்கரன் விக்கினேஸ்வரா

ஓர் நாட்டின் பாதுகாப்பு என்பது காவல்துறை மாற்றம் இராணுவத்தை மட்டும் சார்ந்ததல்ல, அந்த நாட்டின் உளவு அமைப்புகளையும் பொறுத்தது.

ஆயினும் உலகில் சிறந்த உளவு அமைப்புகளில், அமெரிக்காவின் சிஐஏ(CIA), முன்னைய சோவியத் யூனியனின் கேஜிபி (KGB) ஆகியவற்றை விஞ்சிய உலகின் அதி சக்திவாய்ந்த உளவு அமைப்பாக இன்றும் விளங்குவது இஸ்ரேல் நாட்டின் உளவு அமைப்புதான் மொசாட்.

உலகில் உள்ள அனைத்து உளவு அமைப்புகளுக்கும் முன்னோடி என்றே கூறப்படுகிறது இந்த இஸ்ரேல் நாட்டின் மொசாட் உளவு அமைப்பு. உலகிலேயே மிக திறமையான மற்றும் அதிபயங்கரமானதாக அனைவராலும் கருதப்படும் உளவு அமைப்பு மொசாட்.




மத்திய கிழக்கில் பதற்றத்தை உருவாக்கியுள்ள ஹமாஸ் மற்றும் ஹிஸ்புல்லா தலைவர்களின் கொலைகளின் பின்னணியில் யார் இருந்திருப்பார்கள் என்பது அனைவருக்கும் வெட்ட வெளிச்சமாக தெரியும்.

### சி.ஐ.ஏ. வையே உளவு பார்க்கும் மொசாட்:

இஸ்ரேல் மக்கள் தொகையிலும், பரப்பளவிலும் சிறியதொரு நாடு, ஆனால்ராணுவத்தில்உளவுதுறையில் அனைத்து நாடுகளுக்கும் முன்னோடி இஸ்ரேல் தான்.

உலகில் உள்ள அனைத்து உளவு அமைப்புக ளுக்கும் முன்னோடி என்றே கூறப்படுகிறது இந்த இஸ்ரேல் நாட்டின் மொசாட் உளவு அமைப்பு. உலகிலேயே மிகதிறமையான மற்றும் அதிபயங்கரமானதாக அனைவராலும் கருதப்படும் உளவு அமைப்பு மொசாட்.

அமெரிக்காவின் சி.ஐ.ஏ. வையே உளவு பார்க்கும் உளவு துறை என்றும் கூறப்படுகிறது. ஆரம்பத்தில் அமெரிக்காவிடம் தான் பயிற்சி பெற்றது மொசாட் ஆனால் இப்போது அமெரிக்கா சி.ஐ.ஏ.வே ஆச்சரியப்படும் அளவிற்கு மொசாட் வளர்ந்து உள்ளது.

இஸ்ரேலுக்கு எதிர் காலத்தில் எதிரி ஆவான் என்று மொசாட் யாரையாவது எண்ணினால் ஆரம்பத்திலேயே அந்த அமைப்பை அழித்து விடும். 1972ம் ஆண்டு மியூனிச் ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்ற இஸ்ரேல் வீரர்கள், பயிற்சியாளர்கள் 11 பேர் பாலஸ்தீன போராளிகளால் கொல்லப்பட்டனர்.

இந்த சம்பவத்திற்குக் காரணமான ஒவ்வொருவரையும் பழிவாங்கி விட்டுதான் இஸ்ரேல் அமைதியானது.

அண்மையில் ஈரான் அதிபர் இப்ராஹிம் ரைசி பயணித்த ஹெலிகாப்டர் விபத்துக்குள்ளானதாக கூறப்பட்டாலும் இஸ்ரேலின் மொசாட் உளவுப்படை சதி செய்து அழித்திருக்கலாம் என்கிற சந்தேகம் வலுவாக இருக்கிறது. ஆனாலும் ஈரான் அதிபர் ரைசியை படுகொலை செய்யவே இல்லை என இஸ்ரேல் சொல்கிறது.

### நாட்டின் பாதுகாப்பும் உளவமைப்பும்:

நாட்டின் மீது நடத்தப்படும் மறைமுக தாக்குதல்களை தடுப்பது நாட்டில் அசம்பாவிதங்கள் ஏற்படாமல் பாதுகாப்பது என உளவு அமைப்புகளின் வேலையும், அவசியமும் ஒவ்வொரு நாட்டுக்கும் இன்றியமையாததாகும்.

துரதிர்ஷ்டவசமாக இவர்களைப் பற்றி யாருக்கும் தெரிவதில்லை. ஒவ்வொருநாடும் அவர்களுக்கென ஒரே உளவு அமைப்பை வைத்திருக்கும். அனைவருக்கும் புரிவது போல சொல்ல வேண்டுமென்றால் இங்கு வேலை செய்பவர்கள்தான் உண்மையான கதாநாயகர்கள் (True Hero's).

அனைத்து நாடுகளும் உளவு அமைப்பை வைத்திருந்தாலும் சிலநாடுகளின் உளவு அமைப்புகள் மட்டும் அவற்றில் சிறந்தவையாகவும், பலம் வாய்ந்தவையாகவும் இருக்கும். இந்த பதிவில் உலகின் சிறந்த உளவு அமைப்புகள் பற்றிய ஓர் பார்வையாகும்.

### கனடியன் செக்யூரிட்டி இன்டல்லிஜென்ட் சர்வீஸ்:

இதன் தலைமையிடம் கனடாவில் உள்ள ஒட்டாவாவில் உள்ளது. 1984 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டளீரீஹாறீஎன்பது கனடாவின் உளவு அமைப்பாகும். இந்த அமைப்புதான் கனடாவின் தேசிய பாதுகாப்பை கவனித்துக் கொள்கிறது.

இவர்களின் முக்கிய கடமை உளவுதகவல்களை சேகரித்தல், இரகசிய ஆபரேஷன்கள், நாட்டின் பாதுகாப்புக்கான அறிவுரைகளை வழங்குதல் ஆகியவை அடங்கும். அமெரிக்கா, இங்கிலாந்து, கனடா, ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து ஆகியவற்றுக்கு இடையேயான உளவுத்துறை கூட்டணியான ஃபைவ் ஐஸில் கனடாவின் பிரதிநிதியாகவும் CSIS உள்ளது.

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

# ஊடுருவி பழிதீர்க்கும் இஸ்ரேலின் மொசாட்

4ம் பக்க தொடர்ச்சி..........

### பெடரல் செக்யூரிட்டி சர்வீஸ்

ரஷ்யாவின் உளவு அமைப்பான இது லுபியங்காவில் உள்ளது. 1995 நிறுவப்பட்ட இது ரஷ்ய கூட்டமைப்பின் முக்கிய மான உள்நாட்டு பாதுகாப்பு நிறுவனமாகும். மேலும் ரஷ்ய அரசின் உள் பாதுகாப்பு, எதிர் நடவடிக்கை மற்றும் ஒழுங் மைக்கப்பட்ட குற்றம், பயங்கரவாதம் மற்றும் போதைப்பொருள் கடத்தலுக்கு எதிரான போராட்டம் ஆகியவற்றிற்கும் இந்த அமைப்புதான் பொறுப்பாகும்.

2011 ஆம் ஆண்டுய்றீய எட்டு பயங்கரவாத தாக்குதல்களை தடுத்ததுடன் புத்தாண்டு மாலையில் மாஸ்கோவில் நடைபெறவிருந்த மனித வெடிகுண்டு தாக்குதலையும் தடுத்தது.

### மினிஸ்ட்ரி ஆஃப் ஸ்டேட் செக்யூரிட்டி

இதன் தலைமையிடம் சீனாவின் பீஜிங்கில் உள்ளது, மாநில பாதுகாப்பு அமைச்சகம் என்பது சீன மக்கள் குடியரசின் பாதுகாப்பு நிறுவனமாகும் இது 1983 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இதன் நோக்கம் எதிரிகளை கண்டறிதல், உளவாளிகள் மூலம் அரசாங்கத்துக்கு பயனுள்ள தகவல்களை அளிப்பதன் மூலம் நாட்டின் பாதுகாப்பை உறுதி செய்வதாகும்.

மினிஸ்ட்ரி ஆஃப் ஸ்டேட் செக்யூரிட்டி தற்போது சைனா இன்ஸ்டியூட்ஸ் ஆஃப் கண்டெம்பரரி இன்டர்நேஷனல் ரிலேசன்ஸ் என்னும் அமைப்பை நடத்தி வருகிறது. இதில் ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வு செய்ய வெளிநாட்டு அறிஞர்களுடன் கலந்தாலோசிக்க பல அறிஞர்களைக் கொண்டுள்ளது.

### தி பன்டெஸ்னாச்ரிச்சென்டென்ஸ்ட்

இதன் தலைமையிடம் ஜெர்மனியில் உள்ளது, 1956 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இது சர்வதேச பயங்கரவாதம், டபிள்யூ.எம்.டி பெருக்கம் மற்றும் சட்டவிரோத தொழில்நுட்ப பரிமாற்றம் போன்ற பல்வேறு துறைகள் பற்றிய தகவல்களை சேகரிக்கிறது.

இது மேஜர் ஜெனரல் ரெய்ன்ஹார்ட்டால் உருவாக்கப்பட்ட ஒரு இரகசிய புலனாய்வு சக்தியான 'கெஹ்லன் அமைப்பு'யை உள்ளடக்கியது. இரண்டாம் உலகப்போருக்குப் பிறகு இந்த அமைப்பு அமெரிக்க புலனாய்வு நிறுவனங்களுடன் இணைந்து பணியாற்றத் தொடங்கியது.

### டைரக்டரேட் ஜெனரல் ஆஃப் எக்ஸ்டெர்னல் செக்யூரிட்டி

பிரான்ஸை தலைமையிடமாக கொண்டு இயங்கும் இந்த அமைப்பு 1982 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. ம்றூசிறீ என்று அழைக்கப்படும் இந்த அமைப்பு பிரெஞ்சு பாதுகாப்பு அமைச்சகத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்குகிறது.

இந்த நிறுவனம் டி.சி.ஆர்.ஐ (உள்துறை புலனாய்வு மைய இயக்குநரகம்) உடன் இணைந்து செயல்படுகிறது மற்றும் இது மிகவும் சுவாரஸ்யமான சின்னங்களில் ஒன்றாகும். இரையின் பறவை இறையாண்மை, செயல்பாட்டு திறன்கள், சர்வதேச செயல்பாட்டு தன்மை மற்றும் ஏஜென்சியின் சின்னத்தில் ம்றூசிறீ-ன் செயல்திறன் ஆகியவற்றைக் குறிக்கிறது. லோகோவில் பிரான்ஸ் ஒரு சரணாலயமாக சித்தரிக்கப்படுகிறது மற்றும் கோடுகள் ம்றூசிறீ பயன்படுத்தும் நெட்வொர்க்குகளை சித்தரிக்கின்றன.

### ஆஸ்திரேலியன் சீக்ரெட் இன்டெலிஜென்ஸ் சர்வீஸ்

இதன் தலைமையகம் கேன்பெர்ராவில் உள்ளது, 1952 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட ஆஸ்திரேலிய இரகசிய புலனாய்வு சேவை அல்லது புறீணூறீ என்பது ஆஸ்திரேலிய அரசாங்க புலனாய்வு அமைப்பாகும், இது வெளிநாட்டு உளவுத்துறையை சேகரித்தல், உளவுத்துறை நடவடிக்கைகளை மேற்கொள்வது மற்றும் வெளிநாடுகளில் உள்ள பிற புலனாய்வு அமைப்புகளுடன் ஒத்துழைப்பு ஆகியவற்றை செய்கிறது.

இருபது ஆண்டுகளுக்கு மேலாக இப்படி ஒரு அமைப்பு இருந்தது அதன் அரசாங்கத்திற்கே தெரியாமல் இருந்தது. இது வெளிச்சத்திற்கு வந்ததும் 1974 மற்றும் 1983 மற்றும் 1994 ஆம் ஆண்டுகளில் அதன் செயல்பாடுகளுக்காக ராயல் கமிஷன் மூன்று முறை ஆய்வு செய்தது.

### ரிசர்ச் அண்ட் அனலைசிஸ் விங்ஸ்

1968 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்த அமைப்பின் தலைமையிடம் புது டெல்லியில் உள்ளது. யூபுநி இன் முதன்மை நோக்கம் அண்டை நாடுகளின் இயக்கம் மற்றும் செயல்பாடுகளை கண்காணிப்பதாகும்.

உளவுத்துறை அமைப்பு மேற்கொண்ட உளவுத்துறை சேகரிப்பில் இருந்த குறைபாடுகளை அம்பலப்படுத்திய 1962 ஆம் ஆண்டு நடைபெற்ற சீன-இந்தியப் போர் மற்றும் 1965 ஆம் ஆண்டு நடைபெற்ற இந்தியா-பாகிஸ்தான் போருக்குப் பின்னர் இந்த அமைப்பு நடைமுறைக்கு வந்தது. அப்போதைய பிரதமராக இருந்த இந்திரா காந்தியும் அவரது அரசாங்கமும் போருக்கு முன்னரும், பயங்கரவாத தாக்குதல்களுக்கு முன்னரும் இந்தியாவை எச்சரித்து பாதுகாக்கும் அமைப்பின் தேவையை உணர்ந்திருந்தனர். அதனால்தான் யூபுநி அமைப்பை உருவாக்கினர்.

### மிலிட்டரி இன்டெலிஜென்ஸ், செச்ஷன் 6

இதன் தலைமையிடம் லண்டன் ஆகும். 1909 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட னிணூ6 மிகப் பழமையான புலனாய்வு அமைப்புகளில் ஒன்றாகும், மேலும் 1569 ஆம் ஆண்டில் சர் பிரான்சிஸ் வேல்சிங்கம் ஒரு ரகசிய சேவை அமைப்பை நிறுவியதிலிருந்து பல்வேறு வடிவங்களில் இருந்து வருகிறார், அவர் ராணி எலிசபெத் ணூ இன் மாநில செயலாளராக ஆனார்.

இது தற்போது இருக்கும் வடிவத்திற்கு 1909 ஆம் ஆண்டு மான்ஸ்ஃபீல்ட் கம்மிங்கால் மாற்றப்பட்டது. இன்றும் இந்த நிறுவனம் சிஐஏ போன்ற உயர்மட்ட நிறுவனங்களுடன் இணைந்து அவர்கள் பணிகளில் உதவுகிறது. புகழ்பெற்ற ஜேம்ஸ்பாண்ட் கதாபாத்திரம் இந்த அமைப்பில் உளவாளியாக இருப்பது போலத்தான் எடுக்கப்பட்டிருக்கும்.

### சென்ட்ரல் இன்டெலிஜென்ஸ் ஏஜென்சி

அமெரிக்காவின் பேர்பாக்ஸில் இதன் தலைமையகம் உள்ளது. 1947 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இதுதான் உலகம் முழுவதும் அமெரிக்காவின் ஆதிக்கம் மேலோங்கி இருக்க முக்கிய காரணமாகும். இந்த நிறுவனம் ஒரு வல்லரசாக அமெரிக்காவின் நிலையை நிலைநிறுத்துவதிலும், நாடு முழுவதும் வெளியுறவுக் கொள்கை உளவுத்துறை மற்றும் பகுப்பாய்வை செய்வதிலும் முக்கிய பங்கு வகிக்கிறது.

இதைச் செய்வதற்கு, சிஐஏ ஒரு காலத்தில் 'ஏர் அமெரிக்கா' என்ற போலி நிறுவனத்தை வைத்திருந்தது, அது ஒரு சிவிலியன் விமான நிறுவனமாக இயங்கியது, ஆனால் லாவோஸ், இந்தோசீனா எல்லை போன்றவற்றில் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ள பயன்படுத்தப்பட்டது.

### பழிக்குப் பழி வாங்கும் மொசாட் :

இதன் தலைமையகம் இஸ்ரேலில் உள்ள டெல் அவிவில் உள்ளது, இது தொடங்கப்பட்ட ஆண்டு 1949 ஆகும். மொசாட் உலகின் மிக துணிச்சலான இரகசிய அமைப்புகளில் ஒன்றாக இருந்து வருகிறது.

இந்த சிறப்பு நடவடிக்கை மற்றும் வெளிநாட்டு புலனாய்வு அமைப்பு 1072 இல் மியூனிக் ஒலிம்பிக்கில் 11 இஸ்ரேலிய விளையாட்டு வீரர்களை பணயக்கைதிகளாக பிடித்து அவர்களின் கொலைக்கு காரணமான அனைத்து பி.எல்.ஓ செயற்பாட்டாளர்களையும் கண்டுபிடித்து கொலை செய்வதற்காக 'கடவுளின் கோபம்' என்ற ஆபரேஷனில் இருந்து தொடங்கியது.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chikne Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swahpoes Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# டிப்பர் வாகன திருடர்கள் நள்ளிரவில் தப்பி ஓட்டம்



தர்மபுரம் போலீஸ் பிரிவுக்கு உட்பட்ட உழவனூர் பகுதியில் கடந்தஇரண்டாம்திகதி அதிகாலை 1.30 மணி அளவில் 15 இற்கு மேற்பட்ட ஆயுத குழுக்கள் வீட்டு உரிமையாளர் இல்லாத சமயம் வீட்டில் இருந்த பெண்களை கத்தி முனையில் மிரட்டி வீட்டின் முன் மதில் மற்றும் கேற்று கதவுகளை உடைத்துக் கொண்டு வீட்டின் உட்பகுதியில் புகுந்து நிறுத்தி வைக்கப்பட்டிருந்த டிப்பர் வாகனத்தை வீட்டு உரிமையாளரின் அனுமதியின்றி அத்துமீறி எடுத்துச்சென்றுள்ளனர்.

இந்தச்சம்பவம் தொடர்பாக வீட்டு உரிமையாளருக்கு மனைவியால் வழங்கப்பட்ட தகவலுக்கு அமைவாக இச்சம்பவம் தொடர்பாக தருமபுர பொலிஸாருக்கு வீட்டு உரிமையாளர் உடனடியாக தகவல் தெரிவிக்கப்பட்டதை அடுத்து விரைந்த பொலிஸார், தருமபுர பொலீஸ் பிரிவுக்கு உட்பட்ட கல்லாட்டு பகுதியில் டிப்பர் பயணிப்பதாக கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைவாக துரத்திச் சென்ற பொழுது டிப்பர் திருட்டில் ஈடுபட்ட சந்தேக நபர்கள் நடுவீதியில் டிப்பர் மற்றும் அவர்கள் பயன்படுத்திய நான்கு மோட்டார்சைக்கிள்களை வீதியில் விட்டு விட்டு தப்பிச் சென்றுள்ளனர்.


அப்பகுதியில் இருந்த டிப்பர் மற்றும் நான்கு மோட்டார் சைக்கிளையும் தருமபுர பொலீஸார் மீட்டுள்ளதுடன் தொடர்ந்துசம்பவம்தொடர்பாக மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

வீட்டு உரிமையாளர் தெரிவிக்கையில் -

தருமபுர பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது இச்சம்பவத்தின் தொடர்புடைய சந்தேக நபர்களை உடனடியாக கைது செய்து தமக்கு உரிய தீர்வினை பெற்றுத்தர வேண்டும் எனவும்தற்பொழுதுதமது வீட்டில் இருப்பதற்கு தான் பெரும் அச்சத்துடன் இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தான் எந்தவித குற்ற செயலிலும் ஈடுபடாத நிலையில் தனக்கு உயிர் ஆபத்து ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். அத்துடன் இச்சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை தடயவியல் பொலீஸாரும் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# மாகாண சபைகள் குறித்த ஜனாதிபதியின் தற்போதைய கரிசனை காலந்தாழ்ந்ததாம்

## விக்னேஸ்வரன் சுட்டிக்காட்டு



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மாகாண சபைகள் தொடர்பில் வெளிப்படுத்தியுள்ள கரிசனைகள் காலந்தாழ்ந்தவையாகவே உள்ளனவென்று தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோருக்கு இடையில் நடைபெற்ற சந்திப்பை அடுத்து மாகாண சபை தேர்தல் திருத்தச்சட்டத்தை நிறைவேற்றுவதற்கும், சில திருத்தங்களை மேற்கொள்வதற்கும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் மாகாண சபைகளை வினைத்திறனான முறையில் முன்னெடுப்பதற்கு ஏற்கனவே நான் பேச்சுக்களை முன்னெடுத்திருந்தேன்.

அப்போது திருத்தங்களை மேற்கொள்வதற்கான வரைவுகளையும் சமர்ப்பித்திருந்தேன். ஆனால் ஜனாதிபதி அதனை முன்னெடுப்பதற்கு தயாராக இல்லாத நிலையிலேயே இருந்தார்.

இந்த நிலையில் தற்போது மாகாண சபைகளுக்கான தேர்தலை முன்னெடுப்பதற்காக தேர்தல் திருத்தச்சட்டத்தை நிறைவேற்றுவதற்கு இணங்கியுள்ளார்.

அதுமட்டுமன்றி,இன்னமும்சில திருத்தங்களை மேற்கொள்வதற்கு அவர் நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக கூறினார் என சுமந்திரன் தெரிவித்துள்ளார். ஜனாதிபதிவாக்குறுதி அளித்தபடி விடயங்களை முன்னெடுத்தால் சிறந்தது.

எனினும், அவர் அத்தகைய செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கானகாலத்தைத் தவறவிட்டுள்ளார். இப்போது காலம் தாழ்த்தப்பட்டுவிட்டது. மேலும் அவர் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றுவார் என்பதற்கும் எந்தவிதமான உத்தரவாதங்களும் இல்லை.

அதேநேரம், மாகாண சபைகளை முன்னேற்றுவதற்காக மேற்கொள்ளப்படுகின்ற சட்ட திருத்தங்கள் மீளப்பெற முடியாதவையாக இருக்க வேண்டும் என்ற உத்தரவாதம் அளிக்கப்பட வேண்டும். ஏனென்றால் கடந்த காலத்தில் மாகாண சபைகளுக்கான சட்டங்கள் மீளப் பறிக்கப்பட்டு விட்டன.

ஒற்றையாட்சிக்கட்டமைப்புள்ள இந்த நாட்டில் அதிகாரங்களை பறிப்பது தொடர்கதையாகவே உள்ளது.

1987 ஆம் ஆண்டு மாவட்டச் செயலாளர், பிரதேச செயலாளர், கிராமசேவகர் ஆகியோரை நிர்வகிக்கும் அதிகாரம் மாகாண சபைக்கு காணப்பட்டாலும் 1992இல் ரணசிங்க பிரேமதாஸவால் மாற்றியமைக்கப்பட்டமையால் மாகாணங்கள் அந்த அதிகாரங்களை இழந்தன.

இதனால், முதலமைச்சராக நான் இருந்த காலத்தில் மாவட்டங்களை நிர்வகிப்பதற்கு நெருக்கடியான சூழலுக்கு முகங்கொடுக்க வேண்டியிருந்தது. - என்றார்.

(05)


முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557

## வரும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதவிகளில் இல்லாவிட்டாலும் முஸ்லிம் காங்கிரஸ் தலைமைக்கு விடயங்களை சாதிக்கத் தெரியும். கட்சி தாவும் கரணமடிக்கும் தலைமைத்துவம் அல்ல இது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் பேசினீர்களா என்று ஊடகவியலாளர் ஒருவர் கேட்டபோது, ஆம் கதைத்தோம். நான் மட்டுமல்ல நண்பர் மனோ கணேசனும் அவருடன் கதைத்தார். அதாவது ரணிலும் சஜித்தும் ஒன்றாக இணங்கி செயலாற்றுமாறு தான் நாங்கள் கதைத்தோம். அதற்கு ரணிலும் உடன்படவில்லை, சஜித்தும் உடன்படவில்லை. அதனால் கவலையடைந்தோம்.

ஜனாதிபதி ரணிலைப் பொறுத்தவரை தலைவருடன் நேரடியாகக் கதைக்காமல் எங்களது வேறு நபர்களுடன் கதைத்து அவர்களது ஒத்துழைப்பை பெற எத்தணித்து வருகிறார். அதனால் முஸ்லிம் காங்கிரஸுக்குள் அதிருப்தி ஏற்பட்டுள்ளது என்றார்.

## நாமலின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாமல் ராஜபக்ஷவுக்கு வரலாறு தெரியாது. 2005 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலுக்குத் தயாராக இருந்தபோது, மஹிந்த ராஜபக்க்சவின் பெயரை நான் தான் முதலில் பரிந்துரைத்தேன்.

அப்போது நான் மிகவும் சிரமப்பட்டேன், ஜனாதிபதி மாளிகைக்கு வந்ததற்காக சந்திரிகா என்னைத் திட்டினார். ஷெஹான் சேமசிங்க மற்றும் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களின் வீடுகள் எரிக்கப்பட்டமை நல்லது என்று நாமல் ராஜபக்ச கூறுவதை நாங்கள் கேட்டுக்கொண்டிருந்தோம்.

இவர்களின் தவறான செயல்களால்தான் இதுபோன்ற சூழ்நிலைகளைச் சந்திக்க நேரிட்டது. நாமல் ராஜபக்க்சவின் தவறான செயற்பாடுகள் காரணமாகவே அத்துகோரள போன்றவர்கள் அன்றைய தினம் உயிர்த் தியாகம் செய்ய நேரிட்டது. போராட்ட தினத்தில் கூட்டங்களை நாங்கள் நடத்தியமை காரணமாகவே அந்த நிலைக்கு முகம் கொடுக்க நேர்ந்தது. அநுராதபுரம் மாவட்டத்தில் எனது வெற்றிடத்தை நாமல் ராஜபக்சவால் நிரப்ப முடியாது என்றார்.

## நீதியரசர் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எந்தவொரு கலந்துரையாடலிலும் ஈடுபடப் போவதில்லை எனவும் மேலும் வலியுறுத்தியுள்ளார்.

தேசபந்து தென்னகோன் பொலிஸ் மா அதிபராக கடமையாற்றுவதைத் தடுக்கும் இடைக்கால உத்தரவை உயர் நீதிமன்றம் அண்மையில் பிறப்பித்தது. இதனைத் தொடர்ந்து, பொலிஸ் மா அதிபர் தொடர்பான பிரச்சினைக்கு பிரதம நீதியரசர் மற்றும் சபாநாயகர் இடையில் பேச்சு நடத்தி தீர்வு காணவேண்டும் என ஜனாதிபதி தெரிவித்தார்.

இந்த நிலையிலேயே, பொலிஸ்மா அதிபர் விவகாரம் தொடர்பில் பிரதம நீதியரசருடன் கலந்துரையாடப் போவதில்லை என்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

## எம்.பிக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள வழிகாட்டுதல்களுக்கு இணங்குகின்றன என்பதோடு சட்டத்தின் பிரிவு 88(1)(ய) முதல் (ந) வரை குறிப்பிட்ட விவரங்கள் விலக்கப்பட்டுள்ளன என்பதோடு திருத்தப்பட்ட பதிப்புகள் இணையதளத்தில் கிடைக்கும் என்று ஆணையகம் தெரிவித்துள்ளது.

## தொழிலதிபர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதற்குள் நாட்டின் இறையாண்மையை சூறையாடுவார்கள். அதன்பின்னர் அவர்களின் கைப்பொம்மையாகவே நாடு மாறிவிடும். இந்த நிலைமைக்கு இடமளிக்க முடியாது. நாட்டை உண்மையாக நேசிக்கும் தலைமைத்துவம் தேவை.

இதயத்தால் ஒன்றிணைந்த அணியொன்று அதற்காக தயாராகியுள்ளது. நாம் எமது நாட்டைப் பாதுகாப்பதற்கு உரிய தலைமைத்துவத்தை அடையாளம் காணவேண்டும். அதற்காக சர்வஜன அதிகாரத்தின் நிறைவேற்றுக்குழு சட்டத்தரணி திலித் ஜயவீரவை ஜனாதிபதி வேட்பாளராக களமிறக்குவதற்கு தீர்மானித்துள்ளது என்றார்.

## பெரமுனவின். ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீர்மானத்தை மேற்கொண்டார் என்று தெரிவித்தார்.

எனது தீர்மானம், எனது தலைவர் மஹிந்த ராஜபக்சவுக்கு எதிரான நடவடிக்கையல்ல. அரசியலில் நிரந்தர நண்பர்களோ நிரந்தர எதிரிகளோ கிடையாது.

செப்டெம்பர் 22 ஆம் திகதி மக்கள் விடுதலை முன்னணிக்கு இந்த நாட்டைக் கொடுப்பதா? அல்லது காலை பேசுவதை மாலையே மறக்கும் சஜித்துக்கு இந்த நாட்டைக் கொடுப்பதா? எனக் கேள்வியெழுப்பினார்.

இந்த வாய்ச்சொல் தலைவர்களுக்கு நாட்டைக் கொடுப்பதைவிட, உங்கள் கருத்தைக் கேட்டு அதற்குத் தலை வணங்கி ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை இந்த நாட்டின் ஜனாதிபதியாக்கும் வேலைத்திட்டத்திற்கு தயாராகி வருகிறேன்.

செம்டெம்பர் 29 எனது பிறந்த தினமாகும். அதற்கு முன்னதாக நாட்டின் நிலைமை சிறப்பாக இருக்க வேண்டும். பருத்தித்துறையில் இருந்து தெய்வேந்திரமுனை வரையில் ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றிக்காக உழைப்பதற்கு தயாராகவே உள்ளேன்.

2015 இல் எனது அம்மா மஹிந்த ராஜபக்ஷ தோல்வியுற்றபோது அவருக்கு துணையாக இருக்கமாறு கூறினார். இப்போது நாட்டின் எதிர்காலத்துக்காக ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்குமாறு கூறுகின்றார் என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



# தேர்தலுக்கான அச்சு செலவினம் இம்முறை 3 மடங்கு அதிகரிக்கும்

கடந்த ஜனாதிபதித் தேர்தலுடன் ஒப்பிடும்போது, இம்முறை ஜனாதிபதித் தேர்தலுக்கான அச்சு செலவினம்மூன்றுமடங்குஅதிகரிக்கக்கூடும்என அரசஅச்சகமாஅதிபர் கங்கானிலியனகேதெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தலுக்கான அச்சுப் பணிகளுக்காக சுமார் 800 மில்லியன் ரூபா செலவிடப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் அச்சிடப்பட்ட வாக்குச்சீட்டின் நீளம் 27 அங்குலமாக இருந்தது.

இந்த முறை வேட்பாளர்களின் எண்ணிக்கைஅதிகரித்தால்,வாக்குச் சீட்டின் நீளம் அதிகரிக்குமாயின் அச்சிடும் செலவுகளும் அதிகரிக்கக்கூடும் எனவும் அரச அச்சகமா அதிபர் கங்கானி லியனகே தெரிவித்துள்ளார்.

(05)

# தொடர்ந்து வரும் ஜனாதிபதிகளால் தமிழ் மக்கள் ஏமாற்றப்படுகிறார்கள்

## இம்ரான் எம்.பி. சுட்டிக்காட்டு



இலங்கையில் வாழும் தமிழ் மக்களின் இனப் பிரச்சினைகளுக்கு காலத்துக்கு காலம் வந்த ஜனாதிபதிகள் எந்தவித தீர்வுகளும் வழங்கவில்லை என திருகோணமலை மாவட்டநாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்துள்ளார்.

சிறுபான்மைசமூகம்ஜனாதிபதித் தேர்தலை எவ்வாறு எதிர்கொள்ள வேண்டும் என ஊடகவியலாளர் ஒருவரால்எழுப்பப்பட்ட கேள்விக்கு பதில் அளிக்கையிலேயே இது தொடர்பில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் -

தொடர்ச்சியான ஏமாற்றமே எஞ்சிவந்தது. எனவே தமிழ் மக்கள் நியாயமானதீர்வுவழங்குவார்என்ற நம்பிக்கையுள்ள புதிய ஜனாதிபதி வேட்பாளர் ஒருவரை ஆதரிக்க முன் வர வேண்டும்.

இந்நிலையில் தமிழ் பொது வேட்பாளரை ஆதரிப்பது என்பதும் பொருத்தமற்றது. ஏனெனில் தமிழ் பொது வேட்பாளர் ஒருவரால் வெற்றி பெறவே முடியாது என்பது நிதர்சனமாகும்.

இப்படி ஒரு சூழ்நிலையில் தமிழ் மக்களது ஆதரவு இல்லாமல் ஒரு ஜனாதிபதியால்தமிழ்மக்களுக்கான தீர்வுகுறித்து சிந்திக்க முடியாத நிலை ஏற்படும். - எனத் தெரிவித்துள்ளார்.

(05)

# மாகாண சபை தேர்தல் சட்டமூலத்துக்கு அரச தரப்பு ஆதரவை பெற்றுத்தருவேன்

## சுமந்திரனிடம் ஜனாதிபதி உத்தரவாதம்

அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தின் கீழ் பறிக்கப்பட்ட அதிகாரங்களில் நிர்வாக ரீதியாக மீளத்தரக்கூடிய அதிகாரங்களை முதலில் வழங்குவதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க உத்தரவாதம் அளித்திருப்பதாகத் தெரிவித்துள்ள இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், நாடாளுமன்றத்தில் மாகாண சபைத் தேர்தல் சட்டமூலம் மீதான வாக்கெடுப்பின்போது எதிர்க்கட்சி அதற்கு முழுமையாக ஆதரவளிக்கும் எனவும், அரசாங்க தரப்பினரின் ஆதரவை தான் பெற்றுத்தருவதாக ஜனாதிபதி கூறியிருக்கிறார் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

மாகாண சபைத் தேர்தல் சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பை 6 ஆம் திகதி முன்னெடுப்பதற்கு கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருக்கும் நிலையில், இதற்குஅப்பால்ஜனாதிபதியுடனானதொலைபேசி உரையாடலின்போது அவர் வழங்கிய ஏனைய உத்தரவாதங்கள், அதிகாரப் பகிர்வு உள்ளிட்ட அரசியல் தீர்வு தொடர்பில் ஜனாதிபதியின் நிலைப்பாடு, அரசியல் தீர்வு விடயத்தில் சஜித் பிரேமதாஸ, அநுரகுமார திஸாநாயக்க ஆகியோர் வழங்கியிருக்கும் உத்தரவாதங்கள் குறித்த திருப்தி நிலை, தற்போதைய நாடாளுமன்றத்தில் மாகாண சபைத் தேர்தல் சட்டமூலத்தை நிறைவேற்றுவதற்கான சாத்தியப்பாடு என்பன தொடர்பில் கேள்வி எழுப்பியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியவை வருமாறு -

அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தின் கீழ் பறிக்கப்பட்ட சில அதிகாரங்களை மீண்டும் வழங்குவதெனில், அதனை நிர்வாக ரீதியாக செய்யமுடியும். அதற்கமைய கல்வி அதிகாரங்கள் அனைத்தையும்மாகாணசபையிடமேவழங்குவதாக ஜனாதிபதி உத்தரவாதம் அளித்தார்.

இருப்பினும் சட்ட ரீதியாக பறிக்கப்பட்ட சில அதிகாரங்களை அச்சட்டங்களைத் திருத்துவதன் ஊடாக அல்லது அவற்றை நீக்குவதன் ஊடாகவே மீளப்பெற முடியும். அதற்கு கால அவகாசம் தேவைப்படும். எனவே தற்போது நிர்வாக ரீதியாக வழங்கக்கூடிய அதிகாரங்களை வழங்குவதாக ஜனாதிபதி கூறுகிறார்.


அரசியல்தீர்வைப்பொறுத்தமட்டில்அரசமைப்பில் இருப்பதை நடைமுறைப்படுத்தல் மற்றும் கடந்த காலங்களில் பறிக்கப்பட்ட அதிகாரங்களை மீள வழங்கல் போன்ற உத்தரவாதங்களையே ஜனாதிபதி வழங்கியிருக்கிறார். மாறாக, அதில் புதிதாக எதனையும் கூறவில்லை.

அதேவேளை அரசியல் தீர்வு விவகாரத்தில் ஏற்கனவே கூறியவற்றை விட முன்னேற்றகரமான விடயங்களை தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்ளடக்குவதாக சஜித் பிரேமதாஸ கூறியிருக்கிறார். அதேபோன்று அநுரகுமார திஸாநாயக்க புதிய அரசமைப்பிலேயே தீர்வு எனக் கூறுவதால், அதில் போதிய தெளிவில்லாமல் இருக்கிறது.


எனவே புதிய அரசமைப்பின் ஊடாக தீர்வு வழங்கல் செயன்முறை எவ்வாறு நடைமுறைப்படுத்தப்படும் என்பது பற்றி எமக்குத் தெளிவாக விளக்கமளிக்கப்பட வேண்டும் என நான் அவரிடம் வலியுறுத்தியிருக்கிறேன். இருப்பினும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க புதிய அரசமைப்பு தொடர்பில் எதனையும் கூறவில்லை.

அடுத்ததாக நாடாளுமன்றத்தில் மாகாணசபைத் தேர்தல் சட்டமூலம் மீதான வாக்கெடுப்பின்போது எதிர்க்கட்சி அதற்கு முழுமையாக ஆதரவளிக்கும். அதேபோன்று அரசாங்க தரப்பினரின் ஆதரவைத் தான் பெற்றுத்தருவதாக ஜனாதிபதி கூறுகிறார். எனவே இச்சட்டமூலம் நிறைவேற்றப்படுமா என்று பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும். - என்றார்.

(05)



## பாரிஸ் ஒலிம்பிக் போட்டியிலிருந்து தருசி கருணாரத்ன வெளியேற்றம்



பாரிஸ் 2024 ஒலிம்பிக் விளையாட்டு விழாவின் பெண்களுக்கான 800 மீற்றர் என்ற இரண்டாம் வாய்ப்பு தகுதிகாண் போட்டியில் பங்குபற்றிய இளம் வீராங்கனை தருஷி கருணாரட்ன அந்த சுற்றுடன் ஒலிம்பிக்கிலிருந்து வெளியேறியுள்ளார்.

குறித்த போட்டி, சனிக்கிழமை நடைபெற்றது.

கடந்த 2 ஆம் திகதி நடைபெற்ற தகுதிகாண் சுற்றின் 6 ஆவது போட்டியில் பங்குபற்றி அப் போட்டியை 2 நிமிடங்கள் 07.76 செக்கன்களில் நிறைவு செய்தார்.

இதனைதொடர்ந்துசனிக்கிழமை இரண்டாம் வாய்ப்பு தகுதிகாண் சுற்றின் 4ஆவது போட்டியில் பங்குபற்றினார்.

அப் போட்டியை 2 நிமிடங்கள் 06.66 செக்கன்களில் நிறைவு செய்து 7ஆம் இடத்தைப் பெற்று ஒலிம்பிக்கிலிருந்துவெளியேறினார்.

இரண்டாம் வாய்ப்புதககதிகாண் சுற்றில் 4 போட்டிகளில் 31 வீராங்கனைகள் பங்குபற்றியதுடன் ஒட்டுமொத்த நிலையில் தருஷி 27ஆவது இடத்தைப் பெற்றார்.

தன்னால் நிலைநாட்டப்பட்ட தேசிய சாதனையை (2:00.66 நி.) ஒலிம்பிக்கில் முறியடிக்கும் குறிக்கோளுடன்சென்றதருஷியால் அதனை முறியடிக்க முடியாமல் போயுள்ளது.

மேலும், பாரிஸ் 2024 ஒலிம்பிக் விளையாட்டு விழாவிலிருந்து முதல் சுற்றுடன் வெளியேறிய நான்காவது இலங்கையர் தருஷி கருணாரட்ன ஆவார்.

கங்கா செனவிரட்ன (நீச்சல் வீராங்கனை), கய்ல் அபேசிங்க (நீச்சல் வீரர்), விரேன் நெத்தசிங்க (பாட்மின்டன்) ஆகிய மூன்று இலங்கையர்கள் ஏற்கனவே முதல் சுற்றுடன் ஒலிம்பிக்கிலிருந்து வெளியேறியமை குறிப்பிடத்தக்கது. (05)

## இரு தனியார் பஸ்கள் ஒன்றுடன் ஒன்று மோதிக்கொண்டதில் 22 பேர் படுகாயம்

மஹாஓயா - அரலகங்வில வீதியில் இரண்டு தனியார் பஸ்கள் ஒன்றுடன்ஒன்றுமோதியதில்22பேர் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்து சனிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

மஹா ஓயாவில் இருந்து அரலகங்வில நோக்கி பயணித்த தனியார் பஸ்ஸூம் எதிர்த்திசையில் வந்தமற்றுமொருதனியார்பஸ்ஸூம் ஒன்றுடன்ஒன்றுமோதிக்கொண்டன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இரண்டுபஸ்களிலும்பயணித்த 02 ஆண்கள், 12 பெண்கள், 06 சிறுவர்கள் மற்றும் 02 சிறுமிகள் காயமடைந்து மஹா ஓயா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்.

இவ்விபத்து தொடர்பில் பஸ் ஒன்றின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன், மஹா ஓயா பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர். (05)



காலைக்கதிர் Kalaikkathir

# தமிழ் பொதுவேட்பாளர் களமிறக்கும் தீர்மானத்துக்கு 5 புலம்பெயர் தமிழர் அமைப்புக்கள் கூட்டாக ஆதரவு

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொதுவேட்பாளர் ஒருவரைக் களமிறக்குவதற்குத் தீர்மானித்துள்ளமையை வரவேற்பதாகவும், இதன்மூலம் தமிழ்மக்கள் தமது அரசியல் அபிலாஷைகளையும், கோரிக்கைகளையும் ஜனநாயக முறையில் உலகறியச்செய்வதுடன் சர்வதேசமயப்படுத்தமுடியும் எனநம்புவதாகவும் 5 புலம்பெயர் தமிழர் அமைப்புக்கள் கூட்டாகத் தெரிவித்துள்ளன.

ஒன்பதாவது ஜனாதிபதித்தேர்தல் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 21 ஆம் திகதி நடத்தப்படும் எனவும், ஓகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனுக்களைத் தாக்கல் செய்யமுடியும் எனவும் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்திருக்கின்றது.

அதன்படி இம்முறை ஜனாதிபதித்தேர்தலில் வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் சார்பில் பொதுவேட்பாளர் ஒருவரைக்களமிறக்குவது குறித்த பேச்சுக்கள் வலுப்பெற்று, அதனை முன்னிறுத்தி சில தமிழ் அரசியல் கட்சிகள் மற்றும் சிவில் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கு இடையிலான இணக்கப்பாட்டு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கின்றது.

இது தொடர்பாகத் தமது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தி உலகத் தமிழ் அமைப்புக்களின் பேரவை, வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவை, இலங்கைத் தமிழ்ச்சங்கம், ஒருங்கிணைந்த தமிழ் அமெரிக்கர்கள் அரசியல் நடவடிக் கைக்குழு மற்றும் உலகத்தமிழ் அமைப்பு ஆகிய 5 புலம்பெயர் தமிழர் அமைப்புக்கள் இணைந்து கூட்டறிக்கையொன்றை வெளியிட்டுள்ளன.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பவை வருமாறு -

ஈழத்தமிழ் மக்கள் சார்பாக பலதரப்பட்ட சமூக அமைப்புக்களும், அவற்றுடன் பல தமிழ்த்தேசிய அரசியல்கட்சிகளும் இணைந்து எதிர்வரும் செப்ரெம்பர் 21 ஆம் திகதி நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ள ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொதுவேட்பாளர் ஒருவரைக் களமிறக்குவதற்குத் தீர்மானித்துள்ளமையை நாம் மிகுந்த உற்சாகத்துடன் வரவேற்கின்றோம்.

இவ்வாறு களமிறக்கப்படும் பொதுவேட்பாளர் மூலம் தமிழ்மக்கள் தமது அரசியல் அபிலாஷைகளையும், கோரிக்கைகளையும் ஜனநாயக முறையில் உலகறியச் செய்யவும், சர்வதேச மயப்படுத்தவும் முடியும் என நம்புகின்றோம்.

சிங்கள தேசத்தால் எம்மக்கள் மீது கடந்த 76 வருட காலமாக கட்டவிழ்த்துவிடப்பட்டுவரும் அட்டூழியங்களையும், அநீதிகளையும், இனப்படுகொலைகளையும், ஏமாற்றுவழிமுறைகளையும் நாம் எமது அனுபவமாகக்கொண்டு, சர்வதேச சட்டங்கள் மற்றும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் மூலம் ஈழத்தமிழர்கள் சுயநிர்ணய உரிமைக்கும், பூரண சுதந்திரத்துக்கும் தகுதியானவர்கள் என்ற அடிப்படையில் எமது சுதந்திரத்துக்கான அரசியல் தீர்வை ஐக்கிய நாடுகள் சபை அல்லது சர்வதேச சமூகத்தால் நடத்தி, கண்காணிக்கப்படுகின்ற பொதுவாக்கெடுப்பின் ஊடாகவே பெற்றுக்கொள்ளவேண்டும் என்ற திடமாக நம்பிக்கையைக் கொண்டிருக்கின்றோம்.

அமெரிக்க பிரதிநிதிகள் சபையில் கடந்த மே மாதம் 15 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 1230 என்ற வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்மானமானது ஈழத்தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்து, அவர்களுக்கு சுதந்திரத்துக்கான பொதுவாக்கெடுப்பின் அவசியத்தைவலியுறுத்துகின்றது. இது ஈழத்தமிழர்களுக்கு சாதகமாக மாறிவரும் சர்வதேச நிலைப்பாட்டின் திருப்புமுனையின் ஆரம்பமாகக் கருதப்படுகின்றது.

பொதுவாக்கெடுப்புக்கான முழு உரிமை எமது மக்களுக்கு உண்டு. அவ்வாறானதொரு பொதுவாக்கெடுப்பின் மூலமாகவே எமது மக்களின் சுயநிர்ணய உரிமையை வென்றெடுக்கமுடியும். அந்த உரிமையை சர்வதேச ஆதரவுடன் நடைமுறைப்படுத்த நாம் ஆவன செய்தல் வேண்டும். அதனை முன்னிறுத்தி நடவடிக்கைகளுக்கு எமது முழுமையான ஆதரவையும், பங்களிப்பையும் நிச்சயமாக வழங்குவோம் என்று அக்கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


(05)

யாழ்ப்பாண வர்த்தகத் தொழிற்துறை மன்றம் ஒழுங்கமைத்து நடாத்தும்

CHAMBER OF COMMERCE AND INDUSTRIES OF YARLPANAM
CCIY
UNITY IS STRENGTH

JAFFNA INTERNATIONAL BOOK FESTIVEL
யாழ்ப்பாண சர்வதேச புத்தகத் திருவிழா
JIBF 2024

யாழ்ப்பாண சர்வதேச புத்தகத் திருவிழா - 2024
Jaffna International Book Festival - 2024



ஆகஸ்ட் – 9 ,10 மற்றும் 11 ம் திகதிகளில்
9th ,10th & 11th August - 2024

யாழ்ப்பாண கலாச்சார மத்திய நிலையம்
Jaffna Cultural Centre – Exhibition gallery space

CCIY . 63- NALLUR CROSS ROAD. NALLUR. JAFFNA | info@cciy.lk | 070 366 3603

ஊடக பங்காளர்கள் காலைக்கதிர்

# நலிவுற்ற சமூகங்களின் கோரிக்கையையும் உள்ளடக்கிய தேர்தல் விஞ்ஞாபனம் தேவை

## சிவில் சமூகம் வலியுறுத்து

கிராமிய மட்டத்தில் இயங்கிவரும் சிவில் சமூகப்பிரதிநிதிகள் ஒன்றிணைந்து நாட்டின் நலிவுற்ற சமூகப்பிரிவினரின் தேவைகள் மற்றும் கோரிக்கைகளை உள்ளடக்கிய விஞ்ஞாபனமொன்றைத் தயாரித்துவருவதுடன், அதனை இம்முறை ஜனாதிபதித்தேர்தலில் போட்டியிடவிருக்கும் சகல வேட்பாளர்களிடமும் கையளிப்பதற்கு உத்தேசித்துள்ளனர்.

ஒன்பதாவது ஜனாதிபதித்தேர்தல் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 21 ஆம் திகதி நடத்தப்படும் எனவும், ஓகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனுக்களைத் தாக்கல் செய்யமுடியும் எனவும் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்திருக்கின்றது.

கடந்த 2015 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின்போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன - பிரதமர் ரணில் விக்ரமசிங்க தலைமையில் நல்லாட்சி அரசாங்கம் ஸ்தாபிக்கப்படுவதற்கு சிவில் சமூக அமைப்புக்கள் ஒன்றிணைந்து பகிரங்கமாகவே தமது ஆதரவை வெளிப்படுத்தின.

அதேபோன்று இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் எந்த வேட்பாளரை ஆதரிப்பது என்பது குறித்தோ அல்லது குறித்தவொரு வேட்பாளரை ஆதரிப்பதற்கான நிபந்தனைகள் குறித்தோ சிவில் சமூக அமைப்புகள் ஒன்றிணைந்து ஏதேனுமொரு இணக்கப்பாட்டுக்கு வந்திருக்கின்றவா என வினவியபோதே சிவில் சமூகப்பிரதிநிதிகள் சிலர் மேற்கண்டவாறு குறிப்பிட்டனர்.

அதன்படி வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள், போர் விதவைகள், விசேட தேவையுடையோர், பால்புதுமையின சமூகத்தினர், ஒடுக்கப்பட்ட சமூகங்கள், பொருளாதார நெருக்கடியால் மிகமோசமாகப் பாதிக்கப்பட்டோர் உள்ளடங்கலாக நலிவுற்ற நிலையில் இருக்கும் சமூகங்களுடன் இணைந்து, அவர்களது உரிமைகளை உறுதிப்படுத்துவதை இலக்காகக்கொண்டு பணியாற்றிவரும் கிராமிய மட்டத்திலான சிவில் சமூக அமைப்புக்கள் ஒன்றிணைந்து இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவிருக்கும் வேட்பாளர்களிடம் கையளிப்பதற்கான விஞ்ஞாபனமொன்றைத் தயாரித்துவருவதாகவும், அந்த விஞ்ஞாபனத்தில் நலிவுற்ற சமூகப்பிரிவினரின் தேவைப்பாடுகள் மற்றும் கோரிக்கைகள் என்பன உள்ளடக்கப்பட்டிருப்பதாகவும் சிவில் சமூகப்பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

அத்தோடு அந்த விஞ்ஞாபனம் முழுமையாகத் தயாரிக்கப்பட்டதன் பின்னர் அதனை ஜனாதிபதி வேட்பாளர்களிடம் கையளிக்கும் அதேவேளை, பகிரங்கமாக வெளியிடுவதற்கும் எதிர்பார்த்திருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

இது இவ்வாறிருக்க, கொழும்பைத் தளமாகக் கொண்டு இயங்கிவரும் சிவில் சமூகப்பிரதிநிதிகள் இம்முறை ஜனாதிபதித்தேர்தலில் போட்டியிடவிருக்கும் வேட்பாளர்களில் ஒருவரை ஆதரிப்பது குறித்து தற்போதுவரை எவ்வித தீர்மானங்களையும் மேற்கொள்ளாத போதிலும், அவர்கள் மத்தியில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவான நிலைப்பாடு காணப்படுவதாகவும் மற்றுமொரு சிவில் சமூகப்பிரதிநிதி தெரிவித்தார். (05)

# பிறந்து 45 நாள்களேயான குழந்தை உயிரிழப்பு

## யாழ்ப்பாணத்தில் விசாரணை ஆரம்பம்

யாழ்ப்பாணம் அளவெட்டி பகுதியில் குழந்தையொன்று சந்தேகத்துக்கிடமான முறையில் சனிக்கிழமை உயிரிழந்துள்ளது.

பிறந்து 45 நாள்களேயான குழந்தையே உயிரிழந்துள்ளது.

குழந்தைக்கு தாய்ப்பால் புகட்டப்பட்டு, சில மணிநேரங்களுக்குப் பின்னர் குழந்தை மயக்கமுற்றுள்ளது. உடனே குழந்தையை அளவெட்டி பிரதேச வைத்தியசாலையில் சேர்த்து, மேலதிக சிகிச்சைக்காக தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சேர்த்தபோது குழந்தை உயிரிழந்துள்ளதாக வைத்தியர்களால் தெரிவிக்கப்பட்டது.

குழந்தையின் உடல் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்ட நிலையில், மரண விசாரணையை வலிகாமம் கிழக்கு பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி மேற்கொண்டார்.

குழந்தையின் உடலில் காயங்கள் மற்றும் தளும்புகள் காணப்படுவதன் காரணமாக உடற்கூற்று பரிசோதனையின் பின்னரே இறப்புக்கான காரணம் தெரியவரும் என்றும் கூறப்படுகிறது.

உடற்கூற்று பரிசோதனைக்காக குழந்தையின் உடல் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

குழந்தையின் மரணம் தொடர்பாக தெல்லிப்பழை பொலிஸாரும் விசாரணைகளில் ஈடுபட்டுவருகின்றனர். (05)

# மூதூரில் 17 பேர் படுகொலை செய்யப்பட்டு 18 ஆண்டுகள்




மூதூரில் 2006ஆம் ஆண்டு இடம்பெற்ற படுகொலைச்சம்பவத்தில் பிரான்ஸ் நாட்டில் இயங்கும் தொண்டு நிறுவனமான அக்ஷன் பாம் என்ற நிறுவனத்தில் பணியாற்றிய 17 பேர் உயிரிழந்து நேற்றுடன் 18 வருடங்களாகின்றன.

இந்நிலையில், தங்களுடைய உறவுகள் படுகொலை செய்யப்பட்டதற்கான நீதி இதுவரை கிடைக்கவில்லை என உயிரிழந்தவர்களின் உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

2006 ஜூலை மாதம் 31ஆம் திகதி வழமை போல் கடமையின் நிமித்தம் மூதூரில் உள்ள அலுவலகத்துக்குச் சென்றிருந்த இப்பணியாளர்கள் மூதூர் பகுதியில் நிலவிய யுத்த சூழ்நிலையின் காரணமாக அலுவலகத்தை விட்டு வெளியேற முடியாத நிலையில் அங்கேயே தங்கியிருந்த சந்தர்ப்பத்தில் 2006 ஓகஸ்ட் மாதம் 4ஆம் திகதி படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவத்தில் 4 பெண்கள் உட்பட 17 உள்ளூர் பணியாளர்கள் உயிரிழந்தனர்.

இப்படுகொலையில் முத்துலிங்கம் நர்மதன், சக்திவேல் கோணேஸ்வரன், ரிச்சட் அருள்ராஜ், சிங்கராஜா பிறீமஸ், ஆனந்தராஜா மோகனதாஸ் ரவிச்சந்திரன், ரிஷிகேசன், கனகரத்தினம் கோவர்த்தனி, கணேஷ் கவிதா, செல்லையா கணேஷ் சிவப்பிரகாசம் ரொமிலா, வயிரமுத்து கோகிலவதனி, அம்பிகாவதி ஜெயசீலன், கணேஷ் ஸ்ரீதரன், துரைராஜா கேதீஸ்வரன், யோகராஜா கோடீஸ்வரன், முரளீதரன் தர்மரட்ணம், ஏ.எல்.மொகமட் ஜப்பா ஆகியோர் படுகொலை செய்யப்பட்டார்கள்.

மூதூர் பொது வைத்தியசாலைக்கு அருகில் இயங்கிவந்த அக்ஷன் பாம் எனும் சர்வதேச தொண்டர் நிறுவனத்தில் 17 பணியாளர்களும் கடமையாற்றிக்கொண்டிருந்தபோது, சீருடை அணிந்து ஆயுதம் தரித்தோர் நிறுவன வளாகத்துக்குள் நுழைந்து, பணியாளர்களை நிலத்தில் குப்புறப்படுக்கச் செய்து, தலையில் சுட்டுபடுகொலை செய்ததாக அன்றைய செய்திகளில் குறிப்பிடப்பட்டது. (05)

# ஜெனரல் ஜகத் ஜயசூரியவுக்கு நடவடிக்கை எடுக்காதது ஏன்?

## ஆஸ்திரேலிய செனெட்டர் அந்நாட்டு சட்டமா அதிபரிடம் கேள்வி

நம்பத்தகுந்த ஆதாரங்களின் அடிப்படையில் போர்க்குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ள இலங்கையின் முன்னாள் இராணுவ தளபதி ஜெனரல் ஜகத் ஜயசூரிய கடந்த 2019ஆம் ஆண்டு ஆஸ்திரேலியாவுக்கு வருகைதந்தபோது அவருக்கு எதிராக ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை? என ஆஸ்திரேலிய செனெட்டர் டேவிட் பிரிட்ஜ் அந்நாட்டு சட்டமா அதிபர் திணைக்களத்திடம் கேள்வி எழுப்பியுள்ளார்.

இனப்படுகொலை தொடர்பில் வழக்குத்தொடர்வதற்கு சட்டமா அதிபரின் அனுமதி அவசியம் என்ற தேவைப்பாட்டை நீக்கும் சட்டமூலம் தொடர்பில் கடந்த வாரம் இடம்பெற்ற பொது அபிப்பிராயம் கோரலில் கருத்து வெளியிடுகையிலேயே ஆஸ்திரேலியாவின் கிரீன்ஸ் நியூ சௌத் வேல்ஸ் செனெட்டர் டேவிட் பிரிட்ஜ் மேற்கண்டவாறு கேள்வி எழுப்பியுள்ளார்.

இலங்கையில் கடந்த 2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட காலப்பகுதியில் அழிவு இடம்பெற்ற அநேக பகுதிகளில் பணியில் இருந்தவரும், மிக மோசமான போர்க்குற்றவாளியாக பலரால் கருதப்படுபவருமான இலங்கையின் முன்னாள் இராணுவத்தளபதி ஜகத் ஜயசூரிய கடந்த 2019ஆம் ஆண்டு ஆஸ்திரேலியாவுக்கு வருகைதந்தபோது, அவருக்கு எதிரான போர்க்குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் ஆஸ்திரேலிய பெடரல் பொலிஸ் விசாரணை மேற்கொள்வதற்குத் தவறியது ஏன்? என அவர் இதன்போது வினவியுள்ளார்.

அக்காலப்பகுதியில் ஜகத் ஜயசூரிய மீதான குற்றச்சாட்டுக்கள் தொடர்பான விவரங்களை சில அமைப்புக்கள் ஆஸ்திரேலிய பெடரல் பொலிஸாருக்கு வழங்கியிருந்ததாகவும், இருப்பினும் அப்போது நிலவிய சில நிர்வாக சிக்கல்களின் காரணமாக இதுகுறித்து விசாரணைகளை மேற்கொள்ளுமாறு பெடரல் பொலிஸில் எவருக்கும் அறிவுறுத்தப்படவில்லை எனவும் சுட்டிக்காட்டிய பிரிட்ஜ், 'இப்பின்னணி குறித்து நீங்கள் அறிந்திருக்கின்றீர்களா?' என சட்டமா அதிபர் திணைக்களத்தின் சார்பில் முன்னிலையாகியிருந்த அதிகாரி கிறிஸ்டோபர் மலோனிடம் கேள்வி எழுப்பியுள்ளார்.

அதற்குப் பதிலளித்துள்ள கிறிஸ்டோபர் மலோன், இவ்வாறான தனிநபர்கள் சார்ந்த மிகக் குறிப்பான விடயங்கள் தொடர்பில் தனக்குப் பரிச்சயம் இல்லை எனவும், இருப்பினும் இதுகுறித்து அவதானம் செலுத்தத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்துள்ளார். (05)

# நியாயமான தேர்தலையும் மக்கள் உரிமைகளையும் உறுதிப்படுத்த மனித உரிமை ஆணைக்குழு ஏற்பாடு

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுடன் தொடர்புடைய மனித உரிமை மீறல்கள் குறித்து விரைந்து நடவடிக்கை எடுப்பதற்கும், இக்காலப்பகுதியில் தேர்தல் சார்ந்த மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்கும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு விசேட நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது.

வாக்களிப்பதற்கும், அரசியல் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கும், சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தல்களில் பங்கேற்பதற்கும் இலங்கை மக்கள் கொண்டிருக்கும் உரிமையை அங்கீகரிக்கும் அதேவேளை, அவ்வுரிமைகள் குறிப்பாக தேர்தலுக்கு முன்னைய, தேர்தல் தினத்தன்று மற்றும் தேர்தலுக்குப் பின்னரான காலப்பகுதியில் முழுமையாகப் பாதுகாக்கப்படுவதை உறுதிசெய்யும் வகையில் தாம் சில விசேட நடவடிக்கைகளை முன்னெடுத்திருப்பதாக மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதன்படி பொலிஸாரும், அரச அதிகாரிகளும் நாட்டின் அரசமைப்புக்கு மதிப்பளித்து, அவர்களது கடமைகளையும் பொறுப்புக்களையும் முழுமையாக நிறைவேற்றவேண்டியதன் அவசியத்தை மீள்வலியுறுத்தி அவர்களுக்கான விசேட வழிகாட்டல்களை ஆணைக்குழு வெளியிட்டுள்ளது.

அதேபோன்று அவ்விரு தரப்பினரும் சட்டத்தின் பிரகாரம் சகல தரப்பினருக்கும் சமத்துவமான பாதுகாப்பை வழங்கவேண்டியது அவசியம் எனவும், எவ்வகையிலும் பக்கச்சார்பான நிலைப்பாட்டையோ, ஒடுக்குமுறைசிந்தனையையோ வெளிப்படுத்தக்கூடாது எனவும் மனித உரிமைகள் ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது.

அத்தோடு எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுடன் தொடர்புபட்டவகையில் இடம்பெறக்கூடிய மனித உரிமை மீறல்கள் குறித்து முறைப்பாடளிப்பதற்கான விசேட தொலைபேசி இலக்கமும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அதற்கமைய 076 7914695 என்ற தொலைபேசி இலக்கத்தின் ஊடாகவோ அல்லது 011 2505566 என்ற தொலைநகல் இலக்கத்தின் ஊடாகவோ தேர்தல் சார்ந்த மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஆணைக்குழுவில் முறைப்பாடளிக்க முடியும்.

இம்முறைப்பாடுகள் தொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டியதன் அவசியத்தைக் கருத்திற்கொண்டு மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கொழும்பிலுள்ள தலைமை அலுவலகத்திலும், பிராந்திய அலுவலகங்களிலும் இதற்கென சிறப்பு அதிகாரிகள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். (05)

# வீதியைவிட்டு விலகிய லொறி 50 அடி பள்ளத்தில் வீழ்ந்தது

## ஹப்புத்தளையில் சம்பவம்



ஹப்புத்தளை தங்கமலை பகுதியில் லொறி ஒன்று வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதாக ஹப்புத்தளை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்று (ஞாயிற்றுக் கிழமை) காலை இடம்பெற்றுள்ளது.



இந்த லொறி நுவரெலியா வெலிமடை ஹப்புத்தளை ஊடாக கொழும்பு நோக்கி பயணித்த போது ஹப்புத்தளை தங்கமலை பகுதியில் வீதியை விட்டு விலகி, சுமார் 50 அடி பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளானது.

விபத்துக்குள்ளான லொறியில் சாரதியும் மற்றுமொருவரும் மாத்திரமே இருந்ததாகவும் எவருக்கும் காயங்கள் எதுவும் ஏற்படவில்லை எனவும் ஹப்புத்தளை பொலிஸார் தெரிவித்தனர். (05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 05.08.2024இல் வெளியிடப்பெற்றது